# ஜாமக்காரன்


# JAMAKKARAN

ஜா ம க் கா ர ன் JAMAKKARAN

VOLUME - 2 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 9

SEPTEMBER 2018 TAMIL & MALAYALAM

ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=



*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் ள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் அன்பானவர்களே.

உங்களுக்கு யாவருக்கும் என் வாழ்த்துதல்கள்.

கடந்த ஜாமக்காரனை வாசித்தவர்களில் சிலர் CSIயைப் பற்றி என்ன எழுதியிருக்கிறீர்கள் என்றே எங்களுக்கு விளங்கவில்லை என்று எழுதியிருப்பதை கண்டு சிரிப்பதா? அழுவதா? என்றே புரியவில்லை. காரணம், இப்படி கேட்டவர்கள் பரம்பரையாக சிஎஸ்ஐ சபையில் அங்கம் வகிப்பவர்களாகும்.

இவ்வளவு தெளிவாக CSIக்கும், லூத்தரன் சபைகளுக்கும் சபைகளுக்குள் நுழைய போகிற **நவீன உபதேசங்களைக்** குறித்து இத்தனை தெளிவாக நான் எழுதியும் தங்களுக்கு விளங்கவில்லை என்று எழுதும் வாசகர்களைக்குறித்து என்ன சொல்ல? இவர்களெல்லாம் சபைக்கு வழக்கமாகபோகும் **பெயர் கிறிஸ்தவர்கள்** என்பது தெளிவாக விளங்குகிறது. எல்லா சபைகளிலும் 100க்கு 80பேர் இப்படிப்பட்டவர்கள்தான் சபைகளில் நிறைந்திருக்கிறார் கள் என்பது விளங்குகிறது. இனி எத்தனை ஆழமான வேதபாடம் நடத்தினாலும் இவர்களுக்கு விளங்காது என்பது உறுதி.

அதேசமயம் ஆகஸ்ட் 2018 ஜாமக்காரனில் நான் எழுதிய ஆசிரியர் குறிப்பைக்குறித்து என்னை பாராட்டியவர்கள் ஏராளம். CSI மாடரேட்டரின் நவீன உபதேசத்தைக் குறித்து நாங்கள் இன்னும் எச்சரிக்கையாக இருப்போம் என்று எழுதி இன்று **லிபரல் தியாலஜி** கல்லூரியில் படித்த ஆயர்கள்தான் பெரும்பாலான எண்ணிக்கையில் சபையை நடத்துகிறார்கள் என்றும் அவர்களின் ஞாயிறு ஆராதனையில் செய்யும் பிரசங்கத்தை வைத்தே அவர்களின் ஆவிக்குரிய ஞானத்தை குறித்து நாங்கள் அறிந்துக்கொள்கிறோம். வாழ்க்கையில் சாட்சியின் அனுபவம் இல்லாமல் பிரசங்க ஆயத்தம் இல்லாமல் சாட்சியில்லாத வர்களாகிய இவர்களில் சிலர் செய்யும் பிரசங்கம் கேட்கும்போதே எங்களுக்கு விளங்குகிறது.

உங்களைப்போன்றோர் **பிஷப்மார் உங்களை வெறுத்தாலும்** பரவாயில்லை என்று தைரியமாக இத்தனை பெரிய விஷயத்தை எங்களுக்கு அறிவிப்பதற்கு நன்றி கூறுகிறோம். நவீன உபதேசங்களை CSI, லூத்தரன் சபைகளில் வினியோகிக்க பல ஆண்டுகளாகவே முயற்சிகள் நடந்துக் கொண்டிருப்பதை அப்படியே புட்டு புட்டு வைத்த உங்களை **அனைத்து CSI சபைகள்** சார்பிலும் வாழ்த்துகிறோம். குறிப்பாக உங்களுக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம். CSI மாடரேட்டர் அவர்கள் **கழுத்தில் அணிந்துள்ள உத்திராட்ச மாலையில்** சிலுவை அணிந்தபோதே அவரின் ஆவிக்குறிய வித்தியாசத்தை சந்தேகப்பட்டோம். கேரளா மாநிலத்தில் **மத்திய கேரளா** CSI டையோசிஸ் பிஷப்மார் யாரும் **இந்து சன்னியாசிகள், சாதுக்களைப்போல் உத்திராட்சை மாலை** அணியும் வழக்கம் யாருக்கும் இல்லை. ஆனால் கத்தோலிக்க உபதேசத்தை போன்ற உபதேசத்தைகொண்ட **ஆர்த்தோடக்ஸ் சபை** என்ற பெயரில் கேரளாவில் ஒரு சபை உண்டு. அதிலுள்ள **கல்யாணம் செய்யாத பிஷப்மார்** அப்படி **உத்திராட்சை மாலை** அணிவார்கள். அவர்கள் வசன அடிப்படை இல்லாத காரணத்தால் அந்த சபையிலிருந்து பிரிந்து வந்த கேரள CSI சபை அந்த பழைய ஆர்த்தோடகஸ் சபை உபதேசத்துக்கு CSI சபையையும் மாற்றுகிறாரா என்ற சந்தேகம் வந்தது. இப்போது உங்கள் ஜாமக்காரனில் வந்த மாடரேட்டரின் 40 நாள் உபவாச அழைப்பும் **இறைக்குடும்பம்** என்ற பயங்கர உபதேசமும் அதை உறுதிப்படுத்து கிறது. இதன் பயங்கரத்தை என் நண்பர்கள்கூட கூறவில்லை. பிஷப்பை தெய்வத்தின் பிரதிநிதி என்று ஆர்த்திடாக்ஸ் - கத்தோலிக்க சபையினர் நம்புகிறார்கள். பேதுருவிடம் கொடுக்கப்பட்ட சபை கட்டும் **திறவுகோல்** பேதுருவிடமிருந்து பரம்பரையாக இப்போதுள்ள பிஷப்புக்கும் கையளிக்கப்படுகிறது என்ற மூட நம்பிக்கை உள்ள விசுவாசிகள் கேரளத்தில் மிக அதிகம் உண்டு. நீங்கள் என்ன எழுதினாலும் அவர்கள் விளங்கிக்கொள்ள மாட்டார்கள். பிஷப்மார் பாவம் செய்தாலும் அவர் கையை முத்தம் செய்வதை பெரும் பாக்கிமாக கருதுவார்கள். அப்படிப்பட்டவர்தான் உங்களைப் பகைப்பார்கள், ஒதுக்குவார்கள், ஆகவே மத்திய கேரளா டையோசிஸ்ஸில் உள்ள நாங்கள் முன்னைவிட உங்களுக்காக பாரத்துடன் ஜெபிக்கிறோம் என்று எனக்கு எழுதியுள்ளார்கள்.

## வாசகர் கடிதம்

☐ தேசிய கீதம் குறித்து **ஜன கன மன அதி** என்ற பாடலின் **ராகம்** ஒரு **கிறிஸ்தவரால் அமைக்கப்பட்ட விஷயம்** எங்களுக்கு புதிய செய்தியாக இருந்தது என்று பலர் எழுதியிருந்தார்கள்.

☐ Online மூலமாக Money Transfer செய்து தங்கள் காணிக்கையை என் வங்கிக்கு அனுப்பியவர்கள் ஏராளம். ஆனால் பணம அனுப்பிய அவர்கள் பெயர் வங்கி பாஸ் புக்கில் காணப்படவில்லை. அதனால் அவர்கள் பணம் அனுப்பியும் பல மாதங்களாக அவர்களோடு நான் தொடர்புகொள்ளமுடியவில்லை அவர்களுக்கு நான் பதில் எழுதாமல் இருந்தாலும் அவர்கள் தொடர்ந்து எனக்கு பணம் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களும் தாங்கள் வங்கி மூலம் எனக்கு பணம் அனுப்பிய விவரத்தை எனக்கு தெரிவிக்காததால் நான் அவர்களுக்கு நன்றி சொல்லி கடிதம் எழுதமுடியவில்லை. அவர்களும் என் பதிலையோ, ரசீதையோ எதிர்பார்க்காமல்

தொடர்ந்து எனக்கு அவர்கள் பணம் அனுப்பிக்கொண்டிருப்பதை எண்ணும்போது இது **ஆவியானவரின் ஏவுதலால்தா**ன் அவர்கள் இந்த ஊழியத்தை இன்றுவரை தாங்குகிறார்கள் என்று கூறுவது மிகையில்லை. என்றாலும் இன்று எழுதும் இந்த ஆசிரியர் குறிப்பு(Editorial) மூலம் அவர்கள் யாவருக்கும் மிகவும் நன்றி கூறுகிறோம். கர்த்தர் தாமே அவர்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக.

**"இடதுகை செய்வது வலது கை அறியகூடாது"**என்று இயேசு கிறிஸ்து கூறியதுபோலவும் மேலும் நீங்கள் எதை செய்தாலும் அதை கர்த்தருக்கென்றே செய்யுங்கள் என்று இயேசு கூறியதை போலவும் பணம் அனுப்பிய இந்த அருமையான பங்காளர்கள் நினைப்பார்களேயானால் அவர்கள் விசுவாசத்தின்படியே கர்த்தர் நிச்சயம் அவர்களை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிப்பார். முகம் தெரியாத அவர்களுக்காக தொடர்ந்து நான் ஜெபிக்கிறேன். கிருபை உங்களிடம் பெருகுவதாக. தொடர்ந்து ஜெபிக்கிறேன்.

**கர்த்தரின் உன்னத பணியில்**

**✍ டாக்டர்.புஷ்பராஜ்**

## நடந்து முடிந்த கூட்டங்களின் ஆசீர்வாத விவரம்:

**கடந்த** மூன்று மாதங்களில் நடந்த கன்வென்ஷன் கூட்டங்களைப்பற்றியும் (இலங்கை) ஹட்டனில் நடந்த கூட்ட விவரங்களையும்,புகைப்படங்களையும் விவரங்களையும் அடுத்த மாதம் வெளியிட முயற்சிக்கிறேன்.

## (YEMEN) ஏமன் நாட்டு கிறிஸ்வர்களின் பிரச்சனை:

2018 ஆகஸ்ட் மாத ஜாமக்காரனில் 30 பக்கத்தில் ஏமன் நாட்டில் இந்தியாவிலிருந்து வேலை செய்ய சென்ற இரண்டு தமிழ்நாட்டு கிறிஸ்தவர்கள் இஸ்லாம் மதத்திற்கு மாறி இஸ்லாம் மத குருக்களின் துண்டுதலோடு கிறிஸ்தவ சபைக்கு அரசாங்கம் மூலமாக தொல்லை கொடுப்பதாக அவர்கள் பெயர்களை குறிப்பிட்டு சுமார் நான்கு இடங்களிலிருந்து என் பெயருக்கு செய்திகள் வந்தது.

ஆனால் அந்த செய்தி பொய் என்றும், அந்த பொய் செய்திகளை எழுதி அறிவிக்க செய்ததே **ஒரு சபையின் பாஸ்டர்** என்று அழைக்கப்படுபவர் ஆகும். அவர் தன் சபையைவிட்டு விலகி போனவர்களின்மேல் கோபங்கொண்டு பல பிரச்சனைகளை உருவாக்குவதாகவும் செய்தி வந்தது.

கிறிஸ்தவர்களின் பிரச்சனை ஏமன் அரசாங்கம் வரை செய்தி போய்விட்டது. அரசாங்கம் விசாரிக்க தொடங்கிவிட்டனர். அரபு நாட்டில் ஏமன் நாட்டில் கிறிஸ்தவர்களுக்கு ஆராதிக்க சுதந்திரம் கொடுத்துள்ளார்கள். அந்த சுதந்திரத்தை கிறிஸ்தவர்கள் தங்களுக்குள்ள பிரச்சனையில் ஒருவரை ஒருவர் **பழி தீர்க்க பொய் செய்திகளை** கசியவிடுவதாக மற்றொரு செய்தி அறிவிக்கிறது. ஆகவே நானே ஏமனில் உள்ள பலரிடம் தொலைபேசியில் செய்திகளின் உண்மை அறிய விசாரித்து வருகிறேன். விரைவில் சரியான செய்தியை ஜாமக்காரனில் எழுதி அறிவிப்பேன். தவறு பாஸ்டரிடமிருந்தாலும், விசுவாசிகளிடமிருந்தாலும் சரியான விவரம் சேகரித்து உங்களுக்கு அறிவிப்பேன்.

## உங்கள் கவனத்திற்கு

2018 **ஆகஸ்ட் மாதம்** 12ம் தேதியிலிருந்து 26ம் தேதி வரை **நானும் - என் மனைவியும் வீட்டில் இல்லாததால்** அனைத்து தொலைபேசியிள் தொடர்பையும் நிறுத்தியிருந்தோம். வாசகர்கள் பொருத்துக்கொள்ளவும். 27ம் தேதி நாங்கள் இருவரும் **வீடு திரும்பிவிட்டோம்.** இனி தொலைபேசியில் எங்களோடு தொடர்புக்கொள்ளலாம் என்பதை அறிவிக்கிறோம்.

## குடும்ப ஆலோசகர் மூலம் ஒன்று சேர்ந்த குடும்பம்:

# சூதாட்டத்துக்கு அடிமையானவனை மணந்துக்கொண்டேன்

## (உண்மை சம்பவம்- சாட்சி)

**(Selected)**

ஆறு மாதங்களுக்கு முன்பு என்னுடைய கணவராகிய ஜானைவிட்டு பிரிந்துவிட்டேன் ஏனெனில் அவர் சூதாட்ட அடிமைத்தனத்தினால் ஆட்கொள்ளப்பட்டார். 15 ஆண்டுகளாக நான் அவரை நேசித்தேன். ஆனால் இப்பொழுது நான் அவரோடு திருமண உறவில் இல்லை. எங்களுடைய பிள்ளைகளைக் குறித்துப் பேசுவதை தவிர நாங்கள் இருவரும் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வதில்லை. அவர் நகரத்தின் மறுபகுதியில் வசித்து வருகிறார். கடந்த வாரம் அவர் மனம் மாற முயற்சித்தார். அவர் நிச்சயமாக அதில் நிலைத்திருக்கப்போவதாக எனக்கு வாக்குக்கொடுத்ததுடன் தன்னை மறுபடியும் சேர்த்துக்கொள்ளும்படி என்னிடம் கெஞ்சினார். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவரை நான் எப்படி நம்ப முடியும்?.

திருமணத்திற்குமுன் நான் முதன்முதலில் **ஜானை** சந்தித்தபோது அவர் மிகவும் கவர்ச்சியாகவும் அழகாகவும் இருப்பதாக எண்ணினேன். அவர் தனது பள்ளியில் சுறுசுறுப்பாகவும் மிகவும் பிரபலமானவராகவும் காணப்பட்டார். அவரைப் பார்த்தவுடனே ஆசைப்பட ஆரம்பித்தேன். அவரும் என்மேல் ஆசைப்பட்டதை கண்டு ஆச்சரியப்பட்டேன். நான் படிப்பை முடித்து அதன்பின் ஜானை திருமணம் செய்துகொண்டு குடும்பம் நடத்துவதற்கு என்னால் காத்திருக்கமுடியவீலலை. நாங்கள் பள்ளியை முடித்த இருமாதங்களில் திருமணம் செய்து கொண்டோம். ஒரு தொலைபேசி அழைப்பு நிலையத்தில் ஜான் ஒரு நல்ல வேலையில் இருந்தார். ஜானுடைய பெற்றோர் அவர் குடும்பத்தில் என்னை சேர்த்துக்கெண்டனர். அவருடைய பெற்றோர் வீட்டுக்கு அருகிலேயே ஓர் சிறிய வீட்டை நாங்கள் வாடகைக்கு எடுத்தோம். ஜானுடைய தாயார் உண்மையாகவே என்னைத் தன் மகளைப்போல நடத்தினார்கள். ஜான் வேலையில் அதிக நேரம் செலவிட வேண்டியதாயிருந்தது. அவர் அதிக நேரம் வேலை செய்யவேண்டியதாகிறது என்று சொன்னபோது முதலில் உண்மை என்றுதான் நான் அவரை நம்பினேன். ஆனால் விரைவிலேயே எங்கள் பணத்தேவைகளை நாங்கள் சந்திக்க முடியாத நிலை ஏற்பட்டது. அவர் அதிகம் சம்பாதித்தபோதும் எங்களுடைய குடும்ப செலவுக்கு போதுமான அளவு பணம் கிடைக்கவில்லை. நான் பணத்தைப்பற்றி ஜானிடம் கேட்டபொழுது அவர் கோபத்துடன் "அது என்னுடைய வேலை . வீட்டை கவனிப்பது உன்னுடைய வேலை" என்றார். எல்லா "பில்களும்

கட்டப்பட்டுவிட்டன. உங்களுக்கு உணவு இருக்கிறது. பிறகு என்ன? என்னை தனியே விட்டுவிடு" எனக் கூறினார். அவருடைய சம்பளச் சீட்டை நான் பார்க்கும்படி அவர் அனுமதிக்கவில்லை. எங்களுக்கு பணத்தட்டுபாடு ஏற்படும்போதெல்லாம் ஜான் சில விளக்கங்களைக்கொடுப்பார். நான் அவரிடம் அதிகக் கேள்விகளை கேட்க முடியாது. அவ்விதம் கேட்டால் அவர் அதிக ஆத்திரப்படுவார் எனினும் நாங்கள் சந்தோஷமாக இருப்பதாகவே நான் நினைத்ததுக்கொண்டேன். ஆனால் எங்களது பிரச்சனை எப்போழுதோ துவங்கிவிட்டது. ஆனால் நான் அவைகளை கவனிக்காமல் விட்டுவிட்டேன்.

பல வருடங்களாகவே காரியங்கள் நன்றாக இருக்கின்றன என எனக்குள் சொல்லிக்கெண்டேன் .என்னுடைய கவனத்தை வீட்டு வேலைகளில் ஈடுபடுத்தி எல்லாவற்றையும் சுத்தமாக வைத்தேன். என் பிள்ளைகள் சுத்தமாக இருந்தனர். என்வீடு சுத்தமாக இருந்தது ஆனால் வருத்தப்படும் நேரங்களில் பிள்ளைகளிடம் நான் கத்த ஆரம்பித்தேன். பின்பு ஒரு இரவு அவரின் சூதாட்டத்தைக்குறித்த பயம் உண்மையானது. ஒருநாள் ஜான் அவர் தம் நேரத்தை சூதாட்டத்தில் செலவிடுவது பற்றிக்கூறினார். நான் பதில் கூறவில்லை. அதனால் எங்களுடைய வீட்டை இரண்டாவது முறையாக அடமானம் வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாகக் கூறினார்.

நான் நோயாளி போலானேன். ஆனால் ஜான் மறுபடியும் இப்படி நடக்காது என எனக்கு வாக்குக்கொடுத்தார். அதற்காக வருந்தினார். எனினும் இது தொடர்ச்சியாக நிகழத் துவங்கியது. சிறிதுகாலம் காரியங்கள் சரியாக நடக்கும் பிறகு எங்களுடைய கூட்டுவங்கி கணக்கில் உள்ள பணம் காணாமல் போய்விடும். நான் இதைப்பற்றி ஜானிடம் கேட்டால் சமாளிக்கும் பதில் தயாராக இருக்கும். சில சமயம் ஜான் சூதாடுவதாக நான் நினைக்கிறேன் என்று குறிப்பால் அவருக்கு தெரிவித்தால் ஆவேசமாக அதை மறுத்துவிடுவார். ஜானுடைய இந்த சூதாட்டம் ஒரு **பாவம்** என நான் ஒருபோதும் நினைக்கவில்லை. என்னிடத்தில் ஏதோ குறைவுள்ளது என்றும் ஏதோ ஒன்றை நான் அவருக்காக செய்யவில்லை அல்லது கொடுக்கவில்லை என்றுதான் நினைத்திருந்தேன். இதை ஒவ்வொருமுறையும் நம்பி என்னை நானே ஏமாற்றிக்கொண்டிருந்தேன்.

பிறகு ஒரு நாள் பெட்டியில் இருந்த வங்கி பாஸ் புத்தகத்தைக் கண்டெடுத்தபோது அவர் எங்களுடைய இரண்டாவது அடமானத்தின்மூலம் கிடைத்த பணத்திலிருந்து அதிகமானதை இழந்துவிட்டார் என்பதைக் கண்டுபிடித்தேன். அது எங்களுடைய பிள்ளைகளின் கல்லூரிக் படிப்புக்காக வைத்திருந்த பணமாகும். எல்லாவற்றிக்கும் மேலாக ஜான் ஆராதனைக்கு வருவதில்லை. ஆலோசனையாளர்களிடமும் வர மறுத்துவிட்டார் நான் என்னை போன்ற பிரச்சனைகளக் கொண்ட சில பெண்களுடன் இணைந்து ஒரு சிறிய வேதபாட கூட்டத்துக்கு

சென்று வந்தேன். ஆண்டவருடைய வார்த்தைகளின் மூலமாகவும். அந்த பெண்களின் மூலமாகவும் பெரிய நான் ஆறுதலை பெற்றுக்கொண்டேன். அனைவரும் இணைந்து இந்தப் பிரச்சனைகளை ஜெபத்தின்மூலம் ஆண்டவரிடம் கொண்டு செல்வது மிகவும் அற்புதமாக இருந்தது.

கெட்ட பழக்கங்களுக்கு அடிமைப்பட்டிருக்கிற ஒவ்வொருவரும் தாங்கள் அப்படியிருப்பதற்குக் காரணமாக சில சாக்குபோக்குகளை எபபோதுமே நம்மிடம் கூறவைத்திருப்பார்கள் என உணர ஆரம்பித்தேன். பல காலத்திற்கு முன்பு நான் செய்திருக்க வேண்டியதை அந்த அடிமைத்தனத்தை மறைப்பதின் மூலம் நான் உண்மையிலே அதற்கு ஊக்கமளிக்கிறேன் என்பதையும் உணர ஆரம்பித்தேன். ஒரு புதிய பெலத்தோடு அன்று செய்தேன். நான் ஜானை நேரிடையாக கண்டித்து அவர் ஆவிக்குரிய ஆலோசகரின் உதவியை பெற்றுக் கொள்ளவில்லையென்றால் நான் அவரை விட்டு பிரிந்து சென்று விடுவேன் எனக் கூறினேன். ஒரு குடும்பம் உடைவது என்பது அவ்வளவு எளிதானதல்ல. இப்படி நடப்பதை நான் விரும்பவில்லை. இது இப்படி இருக்கவும் கூடாது. ஆனால் நான் ஜானுடன் வாழ மீண்டும் அவரை என்னுடன் சேர்த்துக்கொண்டால் அந்த பாவம் மறுபடியும் நடக்காது என எப்படி உறுதியாய் இருக்கமுடியும்? நாங்கள் மறுபடியும் இணைந்து வாழ முடியுமா? என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் அவர் திருமண ஆலோகரிடம் வர சம்மதித்தால் மற்ற மனிதர்களைப் போல நாம் வாழலாம் என்றேன். உண்மையில் நான் அவரை நேசிக்கிறேன். ஆனால் அவரோடு வாழமுடியுமா என தெரியவில்லை எங்கள் வாழ்க்கையில் ஏதாவது நம்பிக்கை உண்டா?

## ஜானுடைய சாட்சி

இப்போது ஜான் கூறுவதைக்கேட்கலாம்: ஜான் கூறியதாவது நான் பல ஆணடுகளாய் பொய்யான வாழ்க்கை வாழ்ந்து வந்தேன். ஆனால் இப்போது என் பாடத்தைக் கற்றுக்கொண்டேன். நான் மாறிவிட்டேன். நான் மீண்டும் ஒன்றாக மனைவியுடன் வாழ விரும்புகிறேன். எனக்குப் பொய் சொல்வது மிகவும் எளிதாயிருந்தது. வளர வளர நான் பொய் பேசுவது அதிகரித்தது. கல்லூரியில் இருக்கும்போது பள்ளி நேரத்திற்குப் பின்பாகவும் வார இறுதியிலும் செய்யும்படியான பகுதிநேரவேலை கிடைத்தது. அதில் எனக்கு வேண்டிய துணிகள் வாங்கினேன். சினிமா பார்த்தேன. பள்ளி நாட்களுகளுக்குப் பிறகு நான் ஆசிரியராக வேண்டும். என எண்ணனேன். என் தகப்பானாரோ நான் பொறியாளராக வேண்டும் என்று எண்ணினார். மற்றபடி பண உதவி செய்ய அவர் மறுத்துவிட்டார். கடைசியாக கல்லூரிப் படிப்பை பாதியில் விட்டுவிட்டு தொலைபேசி நிலையத்தில் பணிபுரியத் தொடங்கினேன். அது நல்லது என கண்டேன். நானும் அந்த வேலையில்அதிகப் பணத்தை சம்பாதித்தேன்.

துவக்கத்தில் அது நன்றாக இருந்தது. வேகமாய் வளர்ந்தேன். அப்பொழுது எனக்கு 25 வயது. நூற்றைம்பது வேலையாட்கள் உள்ள ஓர் துறைக்கு நான் பொறுப்பாளராக இருந்தேன். ஆனால் நான் மிகுந்த திருப்தியாயிருந்தேன். நான் அதிக வேலை செய்யவேண்டி இருந்தது. என் வேலை பளுவை பிறரிடம் பிரித்துக் கொடுப்பதும் கடினமாய் இருந்தது. ஆட்களைக் திட்டினேன். சரியாக வேலை செய்யாமல் விட்டுவிடுவதைக்குறித்து நான் கோபப்பட்டேன். ஆதனால் ஏற்பட்ட அழுத்தத்தை நான் சரியாகக் கையாளவில்லை. என்னை அமைதிப்படுத்து வதற்காக வேலை முடிந்தவுடன் **குடிக்க ஆரம்பித்தேன்.**

எங்களுக்கு பிள்ளைகள் பிறந்தபொழுது நான் பணம் சம்பாதிப்பதில் மிகவும் ஆர்வம் கொண்டேன். நான் வாழ்ந்ததை விட என் பிள்ளைகள் சிறப்பான வாழ்க்கை வாழ விரும்பினேன். நான் ஓய்வுபெற்றபின் எனக்கு வேண்டிய பணத்தையும் சேர்க்க விரும்பினேன். என் பழைய ஆவிக்குரிய நண்பர்களை விட்டுவிலக ஆரம்பித்தேன் வீட்டுக்குவரும் வழியில் **சூதாட்டம்** நடக்கும் இடத்தில் நிற்க ஆரம்பித்தேன். துவக்கத்தில் அது எனது கவலைகளை வெளியேற்றுவதற்கு உதவிசெய்ததுபோல் இருந்தது மற்றவர்களோடு சூதாடும்போது நான் தனிமையை உணரவில்லை முதலில் சில முறைகள் கொஞ்சம் பணத்தை ஜெயித்தேன். ஆனால் அடுத்த இரண்டு இரவுகளில் **நான் எல்லாவற்றையும்** இழந்துவிட்டேன்.

ஜெயிப்பதும் தோற்பதும் தொடர்ந்து சூதாட்டத்தில் ஒவ்வொருமுறை நான் சவாவிடும்போதும் பில்லை கட்டிவிட முயற்சித்தேன் என்னிடம் பணம் குறைவுபடும்போது என்னுடைய தவண அட்டையை பயன்படுத்தி முன் பணம் பெற்று சூதாட்டத்தில் பயன்படுத்தினேன். என் தாயாரிடமோ என் மகளிடமோ கூட ஒருமுறை கடன் வாங்கினேன். என் மனைவிக்கு இதை தெரியப்படுத்த விரும்பவில்லை. நான் மிகவும் இரகசியமாக என் பழக்கத்தை அவளுக்கு தெரியாமல் பார்த்துக்கொண்டேன். என் மனைவி என்னைக் கண்டித்தாலோ பணத்தைப்பற்றி கேட்டாலோ நான் அவளை திட்டுவேன். நான் சூதாடுகிறேன் என்பதை நான் மறுக்கும் அதே வேளையில் சூதாட்ட விடுதிக்கு செல்ல முயற்சிப்பேன்.

என்னைப்போல உள்ள மக்களுக்கு உதவும்படியாக ஒழுங்கு செய்யப்பட்ட சில ஆவிக்குரிய கூட்டங்களுக்கு நான் சென்றேன். ஆனால் முழு நிகழ்ச்சியுமே எனக்கு கேலிக்கூத்தாகத் தெரிந்தது. நான் இந்த ஜனங்களைப்போல வியாதியஸ்தனல்ல என்று எனக்குள்ளேயே சொல்லிக்கொண்டேன். ஆனால் என் மனைவி எஸ்தர் என்னை விட்டுப் பிரிந்துப்போன பின்பு இவ்வித ஆவிக்குரிய கூட்டத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்துக்கொண்டேன். என்னுடைய சொந்த பலத்தினால் என்னுடைய இந்த அடிமைத்தனத்தை மேற்கொள்ள முடியாது என்பதையும் உணர்ந்தேன். கடைசியாக ஆலோனை பெற சென்றேன். தேவனிடம் அழுதேன். அவர் என்

ஜெபத்தை கேட்டார். எனக்குப் புது இருதயத்தை தந்தார். இப்பொழுது சூதாட்டத்திற்கும். மதுபழக்கத்திற்கும் அடிமையாய் இருந்த நான் அவைகளுக்கு பதிலாக புதிய வாஞ்ஜையை எனக்குள் கொண்டிருக்கிறேன். நான் இப்பொழுது எனது **தேவனுக்கு** உண்மையாயிருக்க விரும்புகிறேன். என்னுடைய மனைவி என்னிடம் மீண்டும் திரும்பி வருவாள் என்றும் இப்போதும் எங்கள் திருமணத்தை பாதுகாத்துக்கொள்ள முடியும் என்றும் ஜெபத்துடனும் நம்பிக்கையுடனும் இருக்கிறேன். எஸ்தர் சபைக்கு செல்பவள். ஒருவர் சபைக்கு சென்றால் மாறமுடியும் என்று தெரிந்தும். நான் தேவனுடைய உதவியினால் நான் மாறியிருக்க முடியும் என நம்பவில்லை. என் மனைவி என் பழைய தவறுகளை சுட்டிக்காட்டுகிறாள். அவளுடைய வாழ்க்கையையும் பிள்ளைகளுடைய வாழ்க்கையையும் நான் நாசமாக்கிவிட்டதாக பழி சொல்லுகிறாள். அவள் இப்படியாக தொடர்ந்து பேசுவதால் நான் வேதனை அடைகிறேன் என்னுடைய திருமணத்தை மீட்டு எடுக்கும்படி தேவனிடம் கெஞ்ஜிகிறேன்.

## உறவை பழைய நிலைக்கு கொண்டுவர ஆலோசனை: ஆவிக்குரிய ஆலோசகர்(கவுன்சிலர்) கூறுவதாவது:

ஜானுக்கும் எஸ்தருக்கும் உதவிசெய்யும்படியாக முதலாவது செய்யப்பட வேண்டியது அவரவர்கள் தங்கள் தவறுகளை உணர செய்வதாகும் என வேதாகமத்தை முறைப்படியாக கையாள ஆலோசனை கூறுகிறது. முதலாவது நாம் எஸ்தரை பற்றி பேசுவோம். நீங்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும் ஜானைவிட எஸ்தரை கையாளுவதுதான் மிகவும் கடினமாயிருந்தது. ஜானுடைய பிரச்சனை என்ன என்பது மிகவும் தெளிவாக தெரிந்தது அவரும் அதை வெளிப்படையாக ஒத்துக்கொண்டார். ஆனால் எஸ்தரும் அதைப்பற்றி பகிர்ந்துகொள்ளும் அளவில் பிரச்சனைகளை கொண்டிருந்தார். ஜான் அவளுக்கு செய்ததைவிட எஸ்தர் ஜானுடன் பேசும் தவறான மறுமொழிகளால் ஜான் அதிகமாக துன்பப்படுகிறோர் என்பதை அவள் உணர்ந்திருந்தாள். அனேக மக்களிடம் காணப்படுவது போல எஸ்தரிடமும் பிறர் தவறுக்காக துன்பம் அனுபவிக்கும் மனோநிலை இருந்தது. ஜானில் தவறான போக்கினால் தான் துன்பம் அனுபவிப்பதாக நினைத்தாள். ஜான் நல்லமுறையில் மாறவில்லை என்றாலும் எஸ்தர் தன்னால் அமைதியான ஒரு வாழ்வை அனுபவிக்கமுடியும் என்பதை அவள் கற்றுக்கொள்ள வேண்டியதாய் இருந்தது. தன்னுடைய வாழ்க்கையின் நம்பிக்கை ஜான் மாறுவதிலோ அல்லது அவள் ஜானுடன் மீண்டும் இணைவதிலோ அல்ல. ஆனால் தேவன்மேல் உள்ள நம்பிக்கையினால் அந்த புது குடும்ப வாழ்க்கையை கட்டப்படமுடியும் என்பதையும் அவள் கற்றுக்கொள்ள வேண்டியாதாய் இருந்தது. அவளுக்கு நம்பிக்கை ஊட்டும்படி நாங்கள் பயன்படுத்திய வசனங்கள். யோவான் 16:33 மற்றும் 1 கொரிந்தியர் 10:13.

இனி தான் தொடர்ந்து **ஜானை நம்பமுடியாது** என்று எஸ்தர் உறுதிபட தெரிவித்ததை குறித்து நாங்கள் பேச வேண்டியதாய் இருந்தது. என்னால் புரிந்துகொள்ளமுடியும். ஆனால் மீண்டும் நம்ப மாட்டேன் என்ற முடிவு **வேதத்தின் படியானது அல்ல.** ஏனென்றால் தேவனுடைய வல்லமையால் ஜான் மாற முடியும் மனிதர் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விலகி நீதிக்கு அடிமையாக மாற முடியும் என்பதை எஸ்தர் ஏற்றுக்கொண்டால் மட்டும் இது நடைபெறும் என்று ரோமர் 6:6 மற்றும் 6:18 குறிப்பிடுகின்றது. "உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள் ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் பக்குவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள். நீதிமான்களாக்கப்பட்டீர்கள் என பவுல் சூதாட்டக்காரர்களையும், குடிகாரர்களையும் குறித்து 1கொரிந்தியர் 6:11ல் குறிப்பிடுகிறார். இருந்தாலும் **ஜான் மாறமுடியும்** என எஸ்தர் நினைக்கவில்லை. எஸ்தருடைய நம்பிக்கை இப்பொழுது தான் ஜானை மாற்றமுடியுமா என்றல்ல. தேவன் ஜானை மாற்றுவார் என்பதில்தான் இருக்கவேண்டும். திருமணமானது கன்மலையான கிறிஸ்துவின்மேல் கட்டப்பட்டிருந்தால் நம்பிக்கையோடு அதை மீண்டும் கட்டி எழுப்பமுடியும்.

எஸ்தரிடம் மாற்றப்பட வேண்டிய முதலாவது காரியம் அவளது தொடர்ச்சியான **கோபமும் கசப்புமாகும்.** அது மன்னியாமைக்கு வழி நடத்திற்று. ஜான் நல்ல முறையில் மாறினால்தான் எஸ்தர் அவனை மன்னிக்க நினைத்தாள். இது தவறாகும். மன்னிப்பு என்றால் என்ன? என்றே அறிந்துகொள்ளவில்லை எனவே எஸ்தர் விட்டுவிட வேண்டியது கோபமும் கசப்பும் ஆகும். அவள் தரித்துக்கொள்ளவேண்டியது. **மன்னிப்பு** என்பதாகும். எஸ்தருடைய வாழ்வில் ஏற்படவேண்டிய முக்கியமாற்றம் இதுவே ஆகும்.

கலாத்தியர் 5:19- 21லிருந்து ஏழு வகையான சுபாவங்களில் **கோபங்களும் கசப்புணர்களும்** உண்டு என்பதை எஸ்தர் அறிந்துகொண்டால் இப்படிப்பட்டவைகளை செய்கிறவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தை சுதந்தரிப்பதில்லை. கலாத்தியர் 5:21. இது கேட்பதற்கு மிகவும் கடினமாய் இருந்தாலும் அப்படிப்பட்ட வாழ்க்கை முறையை மேற்கொள்ளும்படியான வல்லமையையும் உண்மையுள்ள புதிய இருதயத்தையும் தேவன் தருகிறார். குறிப்பாக பகைகள் **விரோதங்கள்,வைராக்கியங்கள்,கோபங்கள்,சண்டைகள், பிரிவினைகள், பொறாமைகள்** ஆகியவை நீக்கப்படவேண்டும். பவுல் இதை தெளிவாக குறிப்பிடுகிறார்.

சகலவிதமான கசப்பும் கோபமும் மூர்க்கமும் கூக்குரலும்,தூஷணமும் மற்ற எந்த துர்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது. (எபிரேயர் 4:31) எனவே எஸ்தர் ஜானிடம் கோபமும், கசப்பும் கொள்வது சரியல்ல என இப்போதுதான் எஸ்தர் அறிந்துக்கொண்டாள். இது மனுஷீக முறையிலான பதிலுறையாக இருந்தாலும் தேவன் விரும்பும் பதிலுறை அல்ல. அவள் யாக்கோபு

1:20லிருந்து **மனிதனுடைய கோபம்** தேவனுடைய நீதியை நடப்பிக்க மாட்டாதே என்பதை அறிந்துகொண்டாள்.

தன்னுடைய கோபமும் கசப்பும் தன்னை விட்டு நீங்க வேண்டும் என்பதில் அவசியத்தைக் கண்டபோது வேதாகம ரீதியிலான மன்னிப்பினால் அதை ஈடு செய்ய வேண்டும் என அறிந்து கொண்டான். சரியானபடி **கிருபையின் அடிப்படையில் எப்படி மன்னிப்பது** என்பதை எஸ்தர் அறிந்துகொள்ளவேண்டும். "ஒருவருக்குக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயம் இருந்து கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல நீங்களும் ஒருவருக்கு ஒருவர் மன்னியுங்கள்" (எபேசியர் 4:32) என்பதே அந்த வசனமாகும். அது அவளுக்கு மிகவும் பயனுள்ளதாயிருந்தது. ரோமர் 5:10 எபேசியர் 2:5 மற்றும் 2:8,9 வசனங்களின் மூலம் கிறிஸ்து அவளை எப்படி மன்னிதிருக்கிறார் என்பதைப்பற்றி அதிக நேரம் எஸ்டதரிடம் விளக்கினோம். அவள் **பாவியாகவும்** மரித்தவளாகவும் கிடந்தாள் என்பதை அவளுக்கு உயர்த்தினோம். தேவன் தன்னை மன்னிக்கத் தகுதியற்றவளாகக் கண்டும். கிறிஸ்துவே மன்னித்து எல்லாவற்றையும் செய்தார் என்பதையும் அவள் அறிந்துகொண்டாள். கிறிஸ்து எவ்வாறு தன்னை மன்னித்தார் என்று அறிந்துகொள்ள எஸ்தருக்கு 3 குறிப்புகள் உதவின. மேலும் ஜானையும் மற்றவர்களையும் எவ்விதம் மன்னிப்பது என்பதையும் அவள் அறிந்துகொண்டாள். அவற்றை இங்கே பகிர்ந்துகொள்கிறோம்.

1. **மன்னிப்பு** என்பது ஒருவருடைய பாவத்தை அவர்களுக்கு எதிராக மறுபடியும் சொல்லிக்காட்டுவதில்லை என வாக்களிதலாகும். ஏன்?

**கிறிஸ்தவர்களாகிய நம்முடைய பாவங்களை தேவன் நமக்கு எதிராக ஒருபோதும் நமக்கு ஞாபகப்படுத்தி வேதனைப்படுவதில்லை.**சங்கீதம் 31:2ன் படி நம்முடைய பாவங்கள் மூடப்பட்டுள்ளது. ஏசாயா. 38:17ன்படி நம் பாவங்களை எல்லாம் அவர் முதுகுக்கு பின்னாக எறிந்துவிட்டார். 1 கொரிந்தியர் 13:5ன்படி அன்பு தீங்கு நினையாது ஒரு வேளை நாம் நம்முடைய துணைவரை மன்னித்து விட்டு பின்பாக அவர்களுடைய பாவத்தை அவர்களுக்கு மறுபடியும் சுட்டிக்காட்டினால் நாம் உண்மையிலேயே **அவர்களை மன்னிக்கவில்லை** என்றுதான் அர்த்தமாகும். கிறிஸ்தவர்களாகிய நம்முடைய பாவங்களை தேவன் ஒருபோதும் நமக்கு எதிராக மீண்டும் கொண்டுவருவதில்லை. கிறிஸ்துவுக்குள தேவன் என்னை மன்னித்ததுபோல நானும் பிறரை மன்னிக்க வேண்டும்.

2. மற்றவர்களிடம் அவர்கள் செய்த தவறை குறித்து மறுபடியும் சுட்டிக்காட்டி மனவேதனைபடுத்தமாட்டேன் என வாக்களித்தலே மன்னிப்பு ஆகும்.

நாம் ஒருவேளை ஒருவரது பாவத்தை அவருக்கு எதிராக மீண்டும் கொண்டு வராதிருக்கலாம். ஆனால் வெட்கம் அடைய தக்கவகையில் நாம் மற்றவரிடம் சென்று அவரவர் கணவர் மனைவி அல்லது நண்பர் எவ்விதம் நமக்கு எதிராக பாவம் செய்தார்கள் என்று கூறுவோம். நாம் பிறரிடம் நம்மை புண்படுத்தியவர்களைப்பற்றி அனாவசியமாக அப்படி கூறும்போது நாம் அவர்களுடைய பாவத்தை அவர்களுக்கு எதிராக கொண்டுவருவதாக அர்த்தமாகிறது. தேவன் நம்முடைய பாவங்களை பிறரிடம் கூறி நமக்கு எதிராக அவற்றை கொண்டுவருவதில்லை. எனவே கிறிஸ்துவுக்குள் தேவன் நம்மை மன்னித்ததுபோல நாமும் பிறரை மன்னிப்போம்.

**3. பிறருடைய பாவத்தில் நாம் தரித்திராதபடிக்கு வாக்களித்தலே மன்னிப்பாகும்.**

நாம் ஒரு வேளை பிறருடைய பாவத்தை அவர்களுக்கு எதிராககொண்டுவராமலும் அல்லது பிறரிடம் கூறாமலும் இருக்கலாம். ஆனால் இரவில் தூங்குவதற்கு பதில் மனதளவில் முழு கசப்போடு அவர்கள் நமக்கு செய்ததை **மறுபடியும் மறுபடியும் நினைத்துக்கொண்டிருப்போம்.** நாம் இப்படி செய்துக்கொண்டிருந்தால் அவர்களது பாவத்தை அவர்களுக்கு எதிராக கொண்டுவருகிறோம் என்று அர்த்தம். பிறர் நமக்கு செய்தததைக்குறித்து நாம் நினைத்து பார்ப்பது தவறல்ல. ஆனால் அதிலேயே தரித்திருப்பது தவறு. அன்பு தீங்கு நினையாது.1கொரி 13:5.

எஸ்தர் தான் கடந்த ஆண்டுகளயில் இத்தனை பாடுகள் அனுபவித்திருக்க வேண்டிய அவசியமில்லை என்று எண்ணினாள். அதுவே அவளது வலிக்கு முக்கிய காரணமானது.

ஆனால் எஸ்தர் 1 பேதுரு 4:12-13ஐப் பற்றி விளங்கிக்கொண்டபோது தன்பாடுகளை நல்ல மனநிலையோடு ஏற்றுக்கொண்டாள். அது அவளுக்குள் அநேக மாற்றங்களை ஏற்படுத்தியது. இப்போது ஜான் தவறு செய்தாலும் அவனை நேசிக்கவும் அவனுக்கு மரியாதை செலுத்தவும் எஸ்தரால் முடிந்தது. ஜானும் தன் மனைவியோடு இருக்கும்படிக்கு இப்போது சீக்கிரமாக வீட்டிற்கு வர விரும்பினான். நாங்கள் அதிகமாக வேதாகம அடிப்படையில் எஸ்தருக்கு உதவினோம் முக்கியமாக அவளது எண்ணங்களை சுய பரிதாபதற்கு அலையவிடாமல் நன்றியோடு இருக்கும்படிக்கு உற்சாகப்படுத்தினோம்.

அவளுடைய மனப்போக்கு மாற ஆரம்பித்தவுடன் எஸ்தர் திருப்தியும் சந்தோஷமும் அடைந்தாள். இன்னும் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர ஆரம்பித்தாள். கசப்போடு முன்பு செய்துவந்த எல்லாவற்றையும் இப்போது மனதில் பாடலுடன் செய்ய ஆரம்பித்தாள். தன்னுடைய மாற்றப்பட்ட வாழ்க்கையின் மூலமாக எவ்வளவு அழகான உதாரணத்தை எஸ்தர் ஏற்படுத்தியிருக்கிறாள் அவள் தன்னுடைய தேவனிலும் தன்னுடைய திருமணத்திலும் மகிழ்ந்தாள்.


# ஜான் மீண்டும் வந்தபோது

ஆவியானவர் ஜானை வியாதிக்கு பதில் **பாவபிரச்சனையில் மாட்டியிருப்பதாக** உணர்த்தியபோது காரியங்கள் மாற ஆரம்பித்தன. தன்னுடைய குடும்பத்தை தான் புன்படுத்தி இருப்பதாக ஜான் இருதயத்தில் உணர்ந்தான். தேவன் ஜானை மாற்ற ஆரம்பித்தார். இதன் முக்கிய வசனம் 1 கொரிந்தியர் 6:11 ஒரு மனிதன் மாற முடியும் என்று அவன் மனைவிக்கு உணர்த்தியதும் அதே வசனம் தான். ஜானுக்கு அவன் தவறை உணர்த்தின மற்றொரு வசனம் 1 தீமோதேயு 5:8. **"ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விஷேசமாக தன் வீட்டாரையும் விசாரியாமல்போனால் அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும் அவிசுவாசியிலும் கெட்டவனுமாய் இருப்பான்".** தேவனோடுள்ள புதிய உறவினால் தான் நினைத்து பார்த்திராத புதிய வல்லமையை ஜான் பெற்றுக்கொண்டான். **குடிப்பழக்கத்தையும், சூதாட்டத்தையும்** தன்னுடைய சொந்த முயற்சியால் நிறுத்தமுடியாது என்று ஜான் அறிந்திருந்தான். முதலில் அதை நிறுத்த முடியும் என்று நினைத்திருந்தாலும் பின்பு ஜான் அதை உணர்ந்தான். அவன் ஏற்கனவே ஆலயத்திற்கு செல்பவனாக இருந்தாலும் இப்போது தன்னுடைய தேவனும் இரட்சகருமான ஆண்டவரிடத்தில் சென்றான். அந்த உறவு எல்லா மாற்றங்களையும் ஏற்படுத்தியது.

வேதாகம ரீதியிலான மாற்றத்தை குறிக்கும் தியானங்களின்படி இந்த முறையை ஜான் அறிந்துகொள்ள துவங்கினான். இந்த முக்கியமான விஷயங்களை நாங்கள் இங்கு குறிப்பிட்டுள்ளோம். மனந்திரும்புதல் என்று அழைக்கப்படுகின்ற இந்த **வேதாகம ரீதியிலான மாற்றம்** ஒரு புதிய வாழ்க்கையை தொடங்குவதற்கான திட்டத்தை ஜானுக்கு கொடுத்தது. சுருக்கமாக குடும்பத்தை கட்டக்கூடிய தேவனை கனப்படுத்தக்கூடிய ஒரு புதிய தின அட்டவணையை ஜான் தொடங்கினான். தனிப்பட்டமுறையில் தினமும் தியானிப்பதுடன் தன் குடும்பத்தோடு இணைந்து ஜெபிக்கவும் வேதம் வாசிக்கவும் தொடங்கினான். அவனுடைய கிறிஸ்தவம் உண்மையாக இருந்ததினால் எஸ்தரும் வெகு விரைவிலேயே அவன் மாற்றம் அடைந்ததை அறிந்து கொண்டாள். அவர்களுயை வாழ்க்கையில் ஞாயிற்றுக்கிழமை மட்டும் அல்ல. மற்ற 6 நாட்களும் கூட மாற்றம் அடைந்தவையாகவே இருந்தது. ஜான் ஆவிக்குரிய விதத்தில் திரும்ப வருவதற்கு 10 நாட்களுக்கு ஒரு மணிநேர ஆலோசனைவேளை மட்டுமே தேவையாய் இருந்தது என்பது மிகவும் சிறப்பான ஒரு செய்தியாகும். எனினும் ஜான் கற்றுக் கொள்ளவேண்டிய காரியங்கள் அநேகம் உண்டு என்றாலும் பிலிப்பியர் 125:6ன்படி இவ்விதம் விசுவாசிப்போம். உங்களில் நற்கிரியையைத் தொடங்கியவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியாந்தம் முடிய நடத்தி வருவாரென்று நம்பி நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.

# உலகத்தில் முதல் VBS தொடங்கிய மிஷனரிகள்

## அருட்திரு. லெஸ்டர் ஜான் ஹேமில்டன் மற்றும் திருமதி. மேரி ஹேமில்டன்




அமெரிக்க மிஷனரிகளான **ஹேமில்டன்** தம்பதியர் 1951-ம் வருடம் **இந்தியாவிற்கு** வந்தடைந்தார்கள். **கர்நாடகா** மாநிலத்தில் கோலார் மாவட்டத்தில் **பங்காருபேட்டை** என்கிற இடத்தில் உள்ள SIBS **தென் இந்திய வேதாகம கல்லூரியில்** சேர்ந்து பணியாற்றும் முன்பாக அந்த மாநில மொழியான **கன்னடம்** கற்றறிய மிகச் சொற்ப காலங்களே அவர்களுக்கு அளிக்கப்பட்டது. ஆனாலும் அவர்கள் இந்தியாவில் ஊழியம் செய்து வந்த நாட்கள் முழுவதும் **கன்னட** மொழியை கற்றுக்கொண்டே இருந்ததால் **கன்னடம்** அவர்களுக்கு ஒரு சொந்த மொழி போல மாறியது. **மேரி ஹேமில்டன்** அவர்களின் வாழ்க்கை நியுயார்க்கில் உள்ள Schuyler Falls என்கிற இடத்தில் ஒரு கிறிஸ்துவ குடும்பத்தில் தொடங்கியது. லெஸ்டர் கென்ஸாவில் உள்ள நியுட்டன் என்கிற இடத்தில் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து ஆவிக்குரிய வழியில் வளர்த்தெடுக்கப்பட்டார். மேரி அவர்களும் லெஸ்டர் அவர்களும் அமெரிக்காவில் உள்ள கெண்ட்டக்கியில் உள்ள **ஆஸ்பரி** (Asbury) **வேதாகம கல்லுரியில்** பட்டம் பயிலும் போது சந்தித்து திருமணம் செய்து கொண்டார்கள். அவர்கள் இருவரும் **"வேர்ல்ட் காஸ்பல் மிஷன்"** (World Gospel Mission) என்கிற அருட்பணி இயக்கத்தில் **மிஷனரிகளாக** பணியாற்ற விண்ணப்பித்து அதன்முலம் இந்தியாவில இவர்கள் இருவரும் பணியமர்த்தப்பட்டார்கள். இதைக்குறித்த லெஸ்டர் எழுதும் போது எபிரேயர் 13:5-ல் சொல்லியது போல **நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை. உன்னை கைவிடுவதுமில்லை** என்ற வார்த்தையின்படி அந்த வசனத்தை நம்பி நாங்கள் இருவரும் மிகவும் விசுவாசத்துடன் இந்தப் பணியை மேற்கொண்டோம் என்று எழுதுகிறார். கர்நாடகாவில் **பங்காருபேட்டை** என்கிற இடத்தில் உள்ள (SIBS) **தென்னிந்திய வேதாகம கல்லுரியில்** 1951-ல் **ஹேமில்டன்** தம்பதியினர் ஆசிரியர்களாக தங்களுடைய பணியைத் துவங்கினார்கள். வெவ்வேறு பாடங்களை அங்குள்ள மாணவர்களுக்கு பயிற்றுவித்ததோடு அந்த மாணவர்களை அந்த வேதாகம கல்லுரியைச் சுற்றியுள்ள **கிராமங்களுக்கு ஊழியப்பயணமாக** அழைத்துச் சென்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் **நற்செய்தியை** பகிர்ந்து கொள்வதை பற்றியும் மாணவர்களுக்கு பயிற்சி அளித்தார்கள். **ஜாய், பால்** மற்றும் **பெக்கி** ஆகிய மூன்று பிள்ளைகளையும் (Residential School) உறைவிடப் பள்ளியில் தங்கி படிக்க வைத்து வளர்த்து வந்தார்கள். 1952-ம் ஆண்டு ஒரு **மாதிரி விடுமுறை வேதாகமப் பள்ளி** நடத்தவதற்கான திட்டத்தை தயார் செய்து தரும்படி திருமதி. **மேரி ஹேமில்டன்** அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். இந்த முயற்சி வெற்றியடைந்து நல்ல முறையில் பயன்பட்டு ஒவ்வொரு வருடமும் **இந்தியாவின் பல பகுதிகளிலும்** பல **வெளிநாடுகளிலும்** பயன்படுத்தப்படும் ஒரு நல்ல நிகழ்வாக அமைந்தது. **மேரி** மற்றும் **லெஸ்டர்** அவர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய முயற்சியால், இந்தியாவில் **"விடுமுறை வேதாகமப் பள்ளி"**


துவங்கப்பட்டது. முதல் "விடுமுறை வேதாகமப் பள்ளி" 1952-ல் **75 மாணவர்களுடன்** நடந்தது. VBS வகுப்புகளுக்கு **ஆசிரியரை** பயிற்றுவித்தல், அதற்கான **பாடத்திட்டத்தை** தயார் செய்தல், தேவையான உபகரணங்களை தயார் செய்தல் போன்ற பொறுப்புகள் **ஹேமில்டன்** தம்பதியினரிடம் ஒப்படைக்கப்பட்டது. VBS ஊழியத்தின் தலைமையிடமாக **பெங்களூரு** அமைக்கப்பட்டது. லெஸ்டரும், மேரியும் கடவுளின் உந்துதலின்படி VBS பணியில் தங்களை முழுமையாக ஈடுப்படுத்திக் கொள்ள தொடங்கினார்கள். 1971-ல் வெளிவந்த ஒரு ஜெபக்குறிப்பு கட்டுரையில்,**"விடுமுறை வேதாகமப் பள்ளியில் பயிலும் மாணவர்களை** ஒரு நிலையான **கிறிஸ்தவ தலைவர்களாக** உருவாக்குவதே **இந்த ஊழியத்தின் இனிமையான வெகுமதி"** என்று மேரி எழுதியிருந்தார். SIBS-ல் தொடங்கப்பட்ட VBS வெறும் **14 வருடங்களில்** 50,000 மாணவ மாணவிகள் தொடர்ந்து பங்கேற்குமளவுக்கு வளர்ந்தது. அவர்கள் இருவரும் அதிக தாலந்து பெற்றவர்களாக இருந்ததோடு, அவர்களோடு இருந்தவர்களின் வாழ்க்கையையும் வளம்பெற செய்தார்கள். SIBS தென்னிந்திய வேதாகமக் கல்லூரிக்கும், விடுமுறை வேதாகமப் பள்ளிக்கும் அவர்கள் அளித்த உழைப்புகள் அவ்வளவு எளிதாக மறக்கக்கூடியவையல்ல. இந்தியாவிற்கு அவர்களை அழைத்த வந்த தேவனுக்கு நாம் யாவரும் நன்றி செலுத்தவேண்டும்.

**ஜாமக்காரன்** அடியேனும் 1964ம் வருடம் பங்காரப்பேட்டைSIBSல் மாணவர்களில் நானும் ஒருவனாகும். அன்று Dr. தியோடர் வில்லியம்ஸ் அவர்கள் ஆசிரியராக இருந்தார். Dr. அத்தியாலி. Dr.கட்டபுரம் போன்ற சிறந்த வேத பண்டிதர்களால் அங்கு பயிற்றுவிக்கப்பட்ட யாரும் சோடை போனதில்லை. அங்கு பயின்றவர்கள் இன்று இந்தியா மற்றும் உலகெங்கும் சிறந்த ஊழியர்களாக சாட்சி இழக்காமல் ஊழியம் செய்கிறோர்கள். 1953ம் வருடம் இந்த VBS என்ற சிறுவர் ஊழியமானது சேலம் அருகேஉள்ள டேனிஷ்பேட்டையில் ஊழியம் செய்ய சகோ. P. சாமுவேல் அண்ணாச்சியின் பொருப்பில் தமிழ்நாடெங்கும் மிளிரத் தொடங்கியது. அவர் ஆரம்பித்த VBS ஊழியத்தில் இரண்டாவது குழுவாக Rev. விக்டர் ஞானராஜ் Rev. மாணிக்க வாசக திரவியம். Rev. வீரராஜ், Dr. புஷ்பராஜ் ஆகிய எங்களை சகோ. P. சாமுவேல் அவர்கள் VBS தலைவர்களாக உருவாகி தமிழ் நாடெங்கும் சிறுவர் ஊழியம் பிரசித்திபெற்றது. அதன் மூலம் நானும் ஒரு கண்வென்ஷன் பிரசங்கியாக உருவாக VBS ம் ஒரு ஆரம்ப காரணமாகும்.

VBS ஒரு சிறுவர் ஊழியம் என்று அலட்சியபடுத்தியவர்களுக்கு அந்த ஊழியம் கிறிஸ்தவ ஜீவயத்தின் **விதை** என்பதை உணர்ந்தார்கள். இந்த VBS ஊழியம் மூலம் தொடங்க்கட்ட சிறுவர்களில் பலர் இன்று பெரிய பிரசித்திபெற்ற ஊழியர்களாக இன்றும் கர்த்தர் உபயோகப்படுத்திக்கொண்டிருக்கிறார். என்னை ஊழியக்காரனாக உருவாக்கின (VBS) விடுமுறை வேதாகம பள்ளிக்காக தேவனைத்துதிக்கிறேன். நாளடைவில் அதுவே என்னை வானொலி செய்தியாளனாக உலகத்துக்கு அறிமுகம் செய்தது. அதற்கு வானொலி நிலையமான FMBA (பெங்களூர்) Back to the Bible Brodcast (இலங்கை)ஆகிய வானொலி நிகழ்ச்சிகளில் நான் தொடர்ந்து வேத பாடம் நடத்தியதாகும்.**டிவி இல்லாத அந்த காலங்களில் வானொலி செய்தி உலகெங்கும்** கேட்கப்பட்டு அதன் காரணமாக என்னை அது உலக பிரசங்கியாக மாற்றி இப்போதும் கர்த்தருடைய ஊழியத்தை சுவிசேஷகனாக நிறைவேற்றிக்கொண்டிருக்கிறேன்.

VBSக்காக நான் நன்றி உள்ளவனாக இருக்கிறேன். அப்படியே என்னை இரட்சிப்பின் அனுபவத்தை பெற்றுக்கொள்ள காரணமாக அமைந்த டேனிஷ்பேட்டை பெத்தேல் பெல்லோஷிப் பூமிக்காக தேவனை துதிக்கிறேன். எங்கோ எப்படியோ வாழ்ந்த திரிந்த என்னை **டேனிஷ்பேட்டைக்கு டாக்டராக அனுப்பிய** எல்லாம் வல்ல இறைவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை துதிக்கிறேன். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக. ஆமென்.

# பிஷப்புக்கு சிவில் ஜெயில் தண்டனை....



Rt.Rev. சாமுவேல்

**தூத்துக்குடி - நாசரேத்** CSI டையோசிஸ் பிஷப் Rt. Rev. **தேவ சகாயம்** அவர்களுக்கு 2 வாரம் **சிவில் ஜெயில்** தண்டனை 5000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

இது தமிழ்நாட்டு தினசரி செய்திதாள்களில் 2018 ஜூலை மாதம் வந்த செய்திகளாகும்.

தூத்துக்குடி CSI டையோசிஸ் முழுவதற்கும் டையோசிஸ் தேர்தல் நடத்தப்பட்டது. இந்த தேர்தலில் இப்போதுள்ள டையோசிஸ் நிர்வாகிகளுக்கு பிடிக்காத சிலருக்கு ஓட்டுரிமை மறுக்கப்பட்டு பலரின் பெயர் தேர்தல் பெயர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டது. **பெயர் நீக்கப்பட்டதை பிஷப்** அவர்களுக்கு அறிவித்தும் பயன் இல்லை. நீதிமன்றம் பிஷப் செய்வேண்டிய நியாயத்தை நிறைவேற்றியது. நீக்கப்பட்டவர்களின் பெயர்களை தேர்தல் பட்டியலில் சேர்க்கப்பட்டபின்தான் தேர்தல் நடத்தவேண்டும் என்றுகட்டளையிட்டது. ஆனால் நீதிபதியின் தீர்ப்பை பிஷப் அவர்கள் உதாசினப்படுத்தி பிஷப் அவர்கள் நிர்வாகிகளுடன் சேர்ந்து தேர்தலை நடத்திமுடித்துவிட்டார்.

பெயர் நீக்கம் செய்யப்பட்ட சபை மக்கள் மறுபடியும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்தனர். நீதிபதியின் தீர்ப்புக்கு பிஷப் கீழ்படியாததால் கோர்ட்டையும் நீதிபதியையும் அவமதித்ததாக கூறி நிதிபதி M.V. முரளிதரன் அவர்கள் ஜூலை மாதம் தனது தீர்ப்பை வாசித்தார். பிஷப் Rt. Rev. தேவ சகாயம் அவர்களுக்கு 2வாரம் சிவில் சிறைதண்டனையும் 5ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டதாக அறிவித்தார். டையோசிஸ் பொருளாளர் திரு.மோகன் அருமைநாயகம் அவர்களுக்கும் அதே தீர்ப்பை கூறினார்.

பழைய தேர்தல் ரத்து செய்யப்படுகிறது. நீக்கப்பட்ட அங்கத்தினரை வாக்காளர் பட்டியலில் சேர்த்து மறுபடியும் புதிதாக தேர்தல் நடத்தப்பட வேண்டும். துாத்துக்குடி CSI டையோசிஸ் தேர்தலை பிஷப் நடத்தாதபடி நீதிபதி சித்தார்த்தன் அவர்களை தேர்தலை அதிகாரியாக நீதிமன்றம் நியமித்தது. இப்படி அந்நியர் கிறிஸ்தவ சபைகளின் தேர்தலை நடத்துவது நல்ல சாட்சியல்ல.

இந்த கட்டுரையை நான் ஆகஸ்ட் 29ம்தேதி எழுதி முடித்தேன். ஆனால் இதற்குள் மறுபடியும் ஒரு Stay ஆர்டர் மறுபடியும் மற்றொரு நீதிமன்றத்தை அணுகுதல் இப்படி டையோசிஸின் வழக்குகள் ஓடிக்கொண்டிருக்கிறது.

இந்த பிரச்சனையில் நீதிமன்றத்தில் **பிஷப்பும்,பொருளாளரும்** மன்னிப்பு கேட்டார்கள். ஆனால் நீதிபதி அதை ஏற்கவில்லை. ஜெயில் தண்டனையை உறுதிபடுத்தினார்.

பிஷப் அவர்களுக்கு இந்த அவமானம் ஏன்? அவருக்கு நீதிமன்ற தீர்ப்பை மீறக்கூடாது என்று தெரியாதா? தேர்தலில் குறிப்பிட்டவர்களை மட்டுமே தேர்தல் பட்டியலிருந்து நீக்கப்பட்டது. அநியாயம் என்று தெரியாதா? தெரியும்!. ஆனால் சுற்றி இருப்பவர்களின் நிர்பந்தம் . தைரியமாக தேர்தல் நடத்துங்கள் பிறகு வரும் பிரச்சனைகளை பார்த்துக்கொள்கிறோம் என்று தவறான காரியத்துக்கு நியாயம் அல்லாத காரியத்தை செய்ய பிஷப் அவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டார். முடிவு!, அகப்பட்டது யார்? சிறை தண்டனை

யாருக்கு ?. பிஷப் ஐயா அவர்கள் ஆயராக இருக்கும்போது அவர் சபையிலேயே இதே மாதிரி பிரச்சனை வந்தது. வாக்காளர் பட்டியலை அவரே சரிபார்த்து மற்றவர்களின் தூண்டுதலுக்கு செவி சாய்க்காமல் தேர்தலை கெட்டபெயர் இன்றி வெற்றிகரமாக நடத்தி முடித்த இவர்தான் இப்போது **பிஷப்பாக பொருப்பேற்றிருக்கிறார்.** இவர் ஆயராக இருந்தபோது நடத்திய தேர்தல்களில் காண்பித்த **நீதி, நியாயம் இவைகள்** எல்லாம் இப்போது எங்கே போயிற்று?. பிஷப் பதவி சக்தி வாய்ந்த பதவி .பிஷப்பின் சிறுபான்மை அதிகாரத்தில் நீதிமன்றம்கூட தலையிடமுடியாது. ஆனால் பிஷப் அவர்கள் சுயமாக தீர்மானம் எடுக்காமல் தராசு ஒரு பக்கமாக சாய இவராக அனுமதித்ததால் ஏற்பட்ட பிரச்சனை தான் இது.

❖ இதே நிலைதான் பழைய பிஷப்புக்கும் ஏற்பட்டது. பழைய பிஷப்புக்கு நிர்வாகம் தெரியாது. அதனால் நீட்டிய இடத்தில் கையெழுத்து போட்டதால் இப்போது பதவியில் இல்லாமல் போனாலும் இரண்டு வழக்குகளில் அகப்பட்டிருக்கிறார் என்று கேள்விப்படுகிறேன். இதையெல்லாம் சுட்டிக்காட்டி நம் புதிய பிஷப் அவர்களுக்கு அவர் பதவி ஏற்ற உடனே ஒரு நீண்ட கடிதம் எழுதி எச்சரித்தேன். நான்நேரில் சந்தித்து மேலும் பல ஆலோசனைகளைக்கூறி ஜாக்கிறதைப்படுத்த தேதி கேட்டேன் இதுவரை அவரிடமிருந்து பதில் இல்லை. ஆலோசனை குறைகளை சுட்டிக்காட்டுவது யாருக்கும் பிடிக்காது என்பது எனக்கும் தெரியும். ஆனால் கர்த்தர் என் கையில் கொடுத்த வித்தியாசமான ஊழிய கடமையை செய்தேன். என் கடமையும் முடிந்தது.

❖ **திருநெல்வேலி** சிஎஸ்ஐ பிஷப்புக்கும் ஏறக்குறைய இதே நிலைதான். அவர் கொஞ்சம் பிஷப் அவர்கள் சுயகௌரவத்திலிருந்து இறங்கி வந்திருந்தால் CSI உடைந்து இருக்காதே!. இப்போது அவர் இரண்டுங்கெட்டான் நிலைமையில்தான் இருக்கிறார். ஒரு குறிப்பிட்ட சபையில் காலை ஆராதனையில் கடைசி நாற்காலியில் அமர்ந்திருந்த அவரை ஆராதனையின் முடிவில் ஆசீர்வாதம் ஜெபம் (Benadiction)கூற கூட யாரும் அழைக்கவில்லையே அன்றே எழுதினேன். பிஷப்மார் பதவியில் இருக்கும் வரைதான் மதிப்பு. மரியாதை, பதவிபோன மறுவினாடியே யாரும் கண்டுகொள்ளமாட்டார்கள். பிஷப் அவர்களால் ஆயர் ஊழியத்தில் முழுபட்டம் வாங்கிய ஆயர்கள்கூட பிஷப் அருகே உட்காரவோ, பேசவோ,பழகவோ, ஒரு வீட்டு விசேஷத்துக்குகூட பிஷப்பை அழைக்க பயப்படுகிறார்கள்.

தூத்துக்குடி நாசரேத் சிஎஸ்ஐ திருமண்டல மக்கள் என்னை மிகவும் நேசிப்பவர்கள்தான் ஆனால் டையோசிஸ் விஷயங்களில் பதவி விஷயங்களில் தேர்தல் விஷயங்களில் என் ஆலோசனையை கேட்க மாட்டார்கள். இப்போது தூத்துக்குடி சிஎஸ்ஐ டையோசிஸ் பிரச்சனையில் யார் எழுதி? யார் நண்பன்? இரண்டு பக்கம் உள்ளவர்களும் விரோதிகள் அல்ல. அத்தனை பேரும் இரத்த உறவுக்காரர்கள்தான். ஆனால் பெயர் கிறிஸ்தவர்களாகி போனார்கள். கர்த்தருக்கு ஊழியம் செய்ய போட்டி போடவில்லை. பதவிக்காகவேதான் இந்த போட்டி. நீதிமன்றம் போவது இவை யாவும் ஒரு கவுரவ பிரச்சனையாக (Prestige)அல்லது Ego தன்னுணர்ச்சி அல்லது சுய பெருமையாக மாறிவிட்டதால்தான் கர்த்தரின் சபை ஊழியத்தை - பதவியாக கருதுகிறார்கள். அதனால்தான் இந்த போட்டி,பொறாமை இவைகளில் அகப்பட்டு விட்டுக்கொடுக்கும் தன்மையில்லாமல் தாழ்ந்துபோகும் தன்மையில்லாமல் பெயர் கிறிஸ்தவர்களாக ஜீவிக்கிறார்கள். கடவுளுக்காக,சபைக்காக, டையோசிஸக்காக பாடுபடுவதாக நினைத்து தங்களை தாங்களே திருப்திப்படுத்திக்கொண்டு தங்களை தாங்களுக்குள்ளே தங்களை அவர்களே ஏமாற்றிக்கொள்கிறார்கள். திருச்சபை கர்த்தரின் சரீரம் என்று வேதம் கூறுகிறது. ஆனால் இன்று அந்த சரீரம் பல துண்டுகளாக வெட்டப்பட்டு கொத்துக்கறியாக்கி சிதைத்துக்கொண்டு இருக்கிறார்கள். இவர்களால் இயேசு கிறிஸ்து இன்னும் சிலுவையில் தொங்கிகொண்டுதான் இருக்கிறார். தூத்துக்குடி-திருநெல்வேலியில் உள்ள ஒரு சிலராவது மனம்இறங்கி இயேசுவை சிலுவையிலிருந்து இறக்கிவைக்க முயலமாட்டீர்களா ? ஜெபிக்கிறேன். ஜெபித்துக்கொண்டேயிருக்கிறேன்.

# பிழையான பாவ மன்னிப்பு உபதேசத்தைக்குறித்து ஆதரித்து பேசிய முதல் பிஷப்.......

**கத்தோலிக்க சபை, யாக்கோபையா** (Jacobit Church) சபை ஆர்த்தடாக்ஸ் சபை இப்படிப்பட்ட சபைகளில் அங்கத்தினராக இருக்கும் சபை விசுவாசிகள் ஆண்களும் பெண்களும் வாரம் ஒருமுறை ஒவ்வொரு சனிக்கிழமையும் அந்தந்த சபை (Father) **ஆயர்** அல்லது பிஷப் ஆகியவர்களிடம் அதற்கென்று தயாரிக்கப்பட்ட **தனி அறையில்** சென்று **ஆயர்** வலையால்(நெட்) அமையப்பட்ட ஒரு மறைவில் அமர்ந்திருப்பார். பாவமன்னிப்பு கேட்கும் நபர் **ஆயர் முகம்** பார்க்கமுடியாதபடி அமர்ந்திருக்க பாவமன்னிப்பு கேட்பவர்கள் ஒவ்வொருவராக சென்று அந்த வாரம் அல்லது அந்த மாதம் தாங்கள் செய்த பாவத்தை **ஆயர் காதுகள்** கேட்கும் வண்ணம் **மெதுவாக** கூறுவார்கள். ஆயர் **அந்த பாவ விவரங்களை** கேட்டு **தான் அதை மன்னித்துவிட்டதாக** கூறி அதன் பரிகாரமாக **ஜெப புஸ்தகத்தில்** குறிப்பிட்ட பக்கத்தில் உள்ள பாவ அறிக்கை ஜெபத்தை செய்துவிடு உன் பாவம் மன்னிக்கப்பட்டுவிடும் என்று கூறுவார்.

அடுத்த மாதம் முழுவதும் அல்லது வாரம் முழுவதும் மறுபடியும் செய்த **அதே பாவத்தை** பற்றி கூறி பாவ மன்னிப்பு பெற மறுபடியும் சனிக்கிழமை ஆயரிடம் வந்து செய்த பாவத்தை கூறியதால் பாவ மன்னிப்பை பெற்றுவிட்டதாக நினைத்து திரும்ப பாவம் செய்ய போய்விடுவார்கள். இப்படிப்பட்ட ரோமன் கத்தோலிக்க சபை தோன்றி அரம்ப நாள் தொடங்கி மேலே கூறிய மற்ற இரண்டு சபைகளும் அதை பின்பற்றி காலம்காலமாக அவர்கள் சபையின் ஒரு முக்கிய சடங்காக மாறிவிட்டது. ஆயர் கொடுக்கும் இந்த பாவ மன்னிப்பை பெறாமல் சபையின் பிரதான சாக்கிமெந்தாகய **நன்மைபெற** (நற்கருணை பெற)முடியாது. பாவமன்னிப்பு ஆயரிடம் பெறாமல் திருமண சடங்கையும் சபையில் நடத்தமாட்டார்கள். இந்த பாவ மன்னிப்பு சடங்கை ஒரு **சட்டமாகவே** கொண்டு வந்து விட்டார்கள்.

ஆரம்ப காலத்தில் **போப் அவர்கள்** மரித்தவர்கள் பேரில் **பாவ மன்னிப்பு சீட்டை** விலைக்கு வாங்கி பணம் சேர்த்த வியாபாரம் போல் (இப்போது இயேசு அழைக்கிறாா இளம்பங்காளர் திட்டத்துக்கு பணம் வசூலிப்பதைப்போல்) இந்த **பாவ மன்னிப்பு** சடங்கையும் சபைக்குள் கொண்டு வந்தனர்.

இதன் விளைவுதான் இந்தியாவில் கேரளா மாநிலத்தில் திருமணமான ஒரு பெண்ணை சுமார் 18 ஆயர்கள் ஒருவர்பின் ஒருவராக கற்பழித்த செய்தி கேரள மாநிலத்தையும் **இந்தியாவையும்** ஏன் **உலகத்தையேகூட** அதிர்ச்சி அடைய செய்தது. இதில் மற்றொரு **பிஷப்பும்** பெண்ணை கற்பழித்தது இன்னும் அதிர்ச்சியடைய செய்தது. ஒரு கிறிஸ்தவ சபையில் ஆயர்கள், பிஷப்மார்கள் நடத்திய கேவலமான சாட்சி கெட்ட காரியமாகும்.

## நடந்தது என்ன?

திருமணமான ஒரு பெண்ணின் கணவன் **அரேபியா தேசத்தில்** பணிபுரிகிறார். இரண்டு வருடத்துக்கு ஒரு முறை அல்லது லீவ் கிடைக்கும்போது இந்தியா வந்து வீட்டில் தன்

மனைவியுடன் சில நாட்கள் தங்கி பணம் சம்பாதிக்க மறுபடியும் அரேபிய சென்றுவிடுவார். தன் மனைவி பெயரில் நிறைய பணம் வீட்டு பக்கத்தில் உள்ள வங்கியில் செலுத்திவிட்டு மனைவியின் தேவைக்கு அவ்வப்போது அதிலிருந்து பணம் எடுத்துக்கொள்ள சொல்லி சென்றுவிடுவார்.

## பாவத்தின் ஆரம்பம்

எப்படியோ ஒருநாள்கணவன் இல்லாத சமயம் **ஒரு நபரின்** தொடர்பு இந்த பெண்ணுக்கு ஏற்பட்டது. இவளின் தனிமையை பயன்படுத்தி அவன் வஞ்ஜகமாக தன் இஷ்டத்துக்கு அந்த பெண்னை இணங்கவைத்து பாவமும் செய்துவிட்டான். சம்பவம் இவ்வளவுதான்!. தன் கணவனுக்கு துரோகம் செய்துவிட்டோமே என்ற இந்த **குற்றஉணர்ச்சி** அவளுக்குள் நாளுக்குநாள் அதிகமாக இவள் செய்வதறியாது தான் ஆராதிக்கும் **சபையான** கேரோளாவில் உள்ள **பத்தினம்திட்டா** என்ற ஊரில் உள்ள ஆலயத்துக்கு சென்றாள். சனிக்கிழமை **பாவ மன்னிப்பு** கோரும் நாள் அன்று ஆலயத்துக்கு சென்று **சபை ஆயரிடம்** தான் செய்த பாவத்தை கூறி பாவத்தை மன்னிக்கும்படி கேட்டிருக்கிறாள். ஆயருக்கு இப்படிப்பட்ட கதை கேட்க குஷி வந்துவிட்டது. அவள் செய்த பாவத்தை விவரித்து கேட்டு ரசிக்க ஆரம்பித்துவிட்டார். உடனே அவளுக்கு **பாவ மன்னிப்பையும்** கொடுத்து குறிப்பிட்ட ஜெபத்தை வாசிக்கும்படி ஆலோனை கூறி அவளை அனுப்பிவிட்டார்.

அதன்பின்தான் ஆயரின் சுயரூப வில்லத்தனத்தை காட்ட ஆரம்பித்துவிட்டார்.

ஒருவாரம் கழித்து **வீட்டு சந்திப்புக்கு** அவள் வீட்டுக்கு சென்று தன் காம இச்சைக்கு இணங்க வைத்தார். பாலுறவுக்கு இணைங்காவிட்டால் கணவரிடம் அவள் பாவத்தை கூறிவிடுவேன் என்று பயமுறுத்தினார். உள்ளூரில் பாவம் செய்தால் கண்டுபிடித்துவிடுவார்கள். ஆகவே அந்த பெண்ணிடம் உன் வங்கியிலிருந்து 50000 ரூபாய் எடுத்துகொண்டு கேரளத்தில் கொச்சிக்கு அருகில் **எர்ணாகுளம்** என்ற பெரிய டவுன் உண்டு. அதில் **ஸ்டார் ஓட்டலில்** ரூம் புக்செய்து தங்கி, எனக்கு அறிவி, நான் அங்கு வருகிறேன். நீ இதற்கு இணங்காவிட்டால் உன் கணவன் அரேபியாவிலிருந்து வந்தவுடன் என்னிடம்தான் வருவான். நீ பாவ மன்னிப்புக்காக அறிவித்த அந்த பாவத்தையும் அந்த நபரையும் அவனிடம் அறிவித்து விடுவேன் என்று பயமுறுத்த இவளும் வேறுவழியின்றி **எர்ணாகுளம்** சென்று **நான்கு நாட்கள்** ஆயரும் அவளும் ஒரே அறையில் தங்கி பாவம் செய்தார்கள்.

இதோடு இந்த பாவதொடர்பை இந்த ஆயர் நிறுத்தவில்லை. தன் சக ஆயர் நண்பர்களுக்கு அவளை அனுபவிக்க ஏற்பாடுகளை செய்தார். இப்படியாக அதே பெண்ணை பலமுறை **பிளாக்மெயில்** செய்து **18 ஆயர்களுக்கு** அந்த பெண்ணை இறையாக்கினார்.

ஒருநாள் அரேபியாவில் உள்ள இவளின் கணவர் அரேபியாவில் இருந்தவாரே தன் கம்ப்யூட்டர் மூலம் தன் வங்கி கணக்கை பார்த்தபோது **இரண்டு மாதத்தில்** 3 முறை 50000 ரூபாய் ரொக்கமாக எடுக்கப்பட்டதை பார்த்தார். தன் மனைவி தன்னிடம் சொல்லாமல் எந்த செலவும் செய்யமாட்டாள். தினசரி இரவு தொலைபேசியில் கணவன்-மனைவி இருவரும் பேசிக்கொள்வார்கள். ஆனால் இந்த 50000 **ரூபாய்க்கான காரணத்தை** தன் மனைவி மறைத்திருக்கிறாள் என்பதை கண்டு பிடித்தார்.

ஒரு நாள் முன் அறிவிப்பு எதுவும் இன்றி கணவர் அரேபியாவிலிருந்து கேரளா வந்து சேர்ந்து தன் மனைவின் நடவடிக்கை குறித்து வீட்டுக்கு அருகே உள்ள வயது முதிர்ந்த தன்

நண்பனின் தாயிடம் அவரிடம் பேச்சுகொடுக்க தன் மனைவி கடைக்கு போவதைபோல் வீட்டைவிட்டு வெளியே போகிறாள். ஆனால் **நான்கு நாட்கள்** அல்லது 5 நாட்கள் கழித்துதான் அவளை வீட்டில் நடமாடுவதை பார்க்கிறேன் என்று கூறிய அந்த விவரத்தை மட்டும் கேட்டு அறிந்தான். ஒரு நாள் தன் மனைவியிடம் 50000 ரூபாய் மூன்று முறை எடுக்கப்பட்டதின் காரணம் கேட்க அவள் பதில்கூற முடியாமல் தவித்தாள். அதன்பின் நான்கு நாட்கள் ஊரில் நீ காணப்படுவதில்லை என்பதையும் அறிந்தேன். எங்கு சென்றாய் என்று அடுக்கடுக்காய் கேள்விகள்கேட்க அவள் கண்ணீர்விட்டபடி உண்மை முழுவதையும் கணவரிடம் கொட்டி தீர்த்து குலுங்கிகுலுங்கி அழுதாள். ஆயர் தன்னை வஞ்சித்ததை அவள் விளக்கமாக கூறினாள்.

நிலைமையின் கொடூரத்தை உணர்ந்த கணவர் ஒரு வக்கிலிடம் ஆலோசனை கேட்க அவரும் இதை சும்மா விடக்கூடாது. இந்த ஆயர் இன்னும் எத்தனை பேரை கற்பழிப்பானோ.! இதற்கு முற்றுபுள்ளி வைப்போம். தனக்கும் தன் குடும்பத்துக்கும் இது பெருத்த அவமானத்தை உண்டாக்கினாலும் பரவாயில்லை என்று போலீஸ் கமிஷனருக்கும் பெண் போலீஸ் காவல் நிலையத்துக்கும் புகார் கொடுத்து. **பெண்கள் உரிமை சங்கத்துக்கு** தன் மனைவி மூலமாகவே பாலுறுவுக்கு ஆயர் தன்னை கட்டாயப்படுத்தப்பட்டதையும் **பிளாக்மெயில்** செய்து பல ஆயர்களுக்கு தான் விருந்தளிக்கப்பட்டதையும் எழுதினார். போலீஸ் **ஆயரை கைதுசெய்தது.** சம்பநதப்பட்ட மற்ற 18 ஆயர்களின் 4 ஆயர்கள் தலைமறைவானார்கள. இப்போது அத்தனை பேரையும் போலீஸ்பிடித்துவிட்டது. ஆயர்கள் அத்தனைபேரும் ஜாமீனில் வெளிவர முயன்றபோது **பெண் உரிமை கழகத்தினர்** ஊர்வலம் நடத்தி ஆயர்களை ஜாமீனில் விடக்கூடாது என்றனர். கேரளா முழுவதும் கொந்தளித்தது. ஆயர்களுக்கு ஜாமீன் மறுக்கப்பட்டது. இதே போன்ற பெண் விஷயத்தில் பிஷப் அவர்களும் பிடிப்பட்டார். இதுதான் சம்பவம்.

இந்த ஒரு பிரச்சனைதான் வெளி உலகத்துக்கு தெரிந்தது. வெளிவராத இப்படிப்பட்ட **காம வெறி** பிடித்த **ஆயர்கள்** எத்தனையோ நபர்கள் உண்டு., சபை விசுவாசிகள் மட்டுமல்ல. சபையில் ஊழியம் செய்யும் எத்தனையோ **கன்னியாஸ்திரிகள்** தங்கள் தங்கியிருக்கும் மடத்தில் செய்யும் சிறு சிறு தவறுகளுக்கும் தண்டனை பெறாமல் இருக்க தங்கள் மேல் அதிகாரிகளான சர்வஅதிகாரம் பெற்ற **பிஷப்மாரையும், ஆயர்களையும்** சந்தோஷப்படுத்த அவர்களின் இச்சைக்கு இணங்கிய கன்னியாஸ்தீரிகள் ஏராளம். அவர்கள் அனுபவித்த கொடுமைகள் மிக ஏராளம். அமெரிக்காவில் **கன்னியாஸ்திரிகளின் இரகசிய** பிரச்சனைகள் என்ற தலைப்பில் பல புஸ்தகங்கள் வெளி வந்துள்ளன. அதில் ஆயர்களும் பிஷப்மார்களும், **மதர் சுப்பிரீயர்களும்** தங்கள் **காம விளையாட்டுக்கு** கன்னியாஸ்திரீகளான தங்களை எப்படி எப்படி பயன்படுத்தினார்கள் என்று கதைகளைபோல் பல புத்தகங்கள் வெளிவந்துள்ளன.

இத்தனைக்கும் இரண்டு காரணம்

1. போலீஸ் அகப்பட்ட இவர்கள் யாரும் திருமணம் செய்யாதவர்கள் ஆகும். இவர்கள் சபையின் **பிஷப்மார்களும், ஆயர்களும்** திருமணம் செய்தவர்கள். இதில் மார்தோமா சபையில் சில பிஷப்மார்களும் உட்படுகின்றனர்.

2. இவர்களுக்கு செம தீனி கிடைக்கிறது. விதவிதமான சாப்பாடுகள், இத்தனையும் சாப்பிட்டுவிட்டதால் ஏற்படும் **சரீர உணர்ச்சிகளை** வெளியே கொட்ட **வழி எங்கே?**

இதனால்தான் இப்படிப்பட்ட ஆபாசங்களும் கற்பழிப்புகளும் நடந்து தற்கொலைகளும் ஏராளமாக நடந்துகொண்டிருக்கிறது. இது இப்படியே நீடிக்ககூடாது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

## பாவ மன்னிப்பு (கும்பசாரம்)

**ஆயரிடம்** பாவங்களை அறிக்கையிடுவதைத்தான் மலையாளத்தில் **கும்பசரிப்பு** என்று கூறுவார்கள். இது நிறுத்தப்படவேண்டும்.!

தாங்கள் செய்த **பாவத்தை கடவுளிடம்** கூறாமல் காமவெறியுள்ள **ஆயராகிய** ஒரு **மனிதனிடம்** கூறுவதால் தான் இத்தனை ஆபாசங்கள் நடைபெற்றது. இப்படிப்பட்ட சம்பவங்கள் நம் பரிசுத்த தெய்வம் இயேசு கிறிஸ்துவுக்கு அவமானத்தை உண்டாக்கியது.

**ஆயர்களாலும் பிஷப்மார்களனாலும் அவர்களும் காம உணர்ச்சிபெற்ற மனித சரீரம் உள்ளவர்களே.**!

அவர்களுக்கும் **காம** எண்ணம், **காம** உணர்ச்சிகள் உண்டு. மேலே குறிப்பிட்ட இந்த மூன்று சபைகளின் **கத்தோலிக்க** சபை, **யாக்கோபையா** சபை, **ஆர்த்தடாக்ஸ்** சபை இவைகள் யாவும் **கிறிஸ்தவ சபைகளே.** ஆனால் மனிதனுக்கு **பாவ மன்னிப்பு** கொடுக்கும் அதிகாரம் இவர்களுக்கு வேதம் கொடுக்கவில்லை.

இயேசு சிஷர்களுக்கு சொன்னது **"நீங்கள் யாரை மன்னிக்கிறீர்களோ** அவர்கள் **மன்னிக்கப்படுவார்கள்"** குறிப்பாக சிஷர்களுக்கு விரோதமாக யாராவது தவறுசெய்தால் சீஷர்கள் மன்னிக்க அதிகாரம் உண்டு.

அப்படியே நமக்கு விரோதமாக யாராவது துரோகம் செய்தாலோ, தவறு செய்தாலோ நாமும் அவர்களை **மன்னிக்கலாம்.** அது மன்னிக்கப்படும்.

உலகத்தில் உள்ள அல்லது **சபையில் உள்ள** விசுவாசிகளின் தனிப்பட்ட பாவத்தை மன்னிக்க **இவர்கள் யார்?** இயேசு கிறிஸ்துவை தவிற மனிதனின் **பாவத்தை மன்னிக்க** இந்த உலகத்தில் **யாருக்கும் அதிகாரம் இல்லை!.** இயேசுகிறிஸ்து உன் பாவம் மன்னிக்கப்பட்டது போ. இனி பாவம் செய்யாதே! என்று இயேசு கூறியபோது பிரதான ஆசாரியன் முதல் அன்று யாவரும் முறுமுறுத்தார்களே கடவுள் ஒருவரை தவிற பாவத்தை மன்னிக்க இந்த உலகத்தில் யாருக்கும் அதிகாரம் இல்லை. அப்படியிருக்க உன்பாவம் மன்னிக்கபட்டது என்று கூறிய **இயேசு கிறிஸ்துவுக்கு** யார் அதிகாரம் கொடுத்தது. இது அன்றைக்கு எழுந்த கேள்வியாகும்.

ஆகவே மேலே நான் குறிப்பிட்ட இந்த மூன்று சபைகளும் **இயேசுவின் நாமத்தை** வைத்துகொண்டே இந்த குறிப்பிட்ட சபைகளின் **பிஷப்மார் - ஆயர்கள்** சபை மக்களுக்கு **அவர்கள் செய்த பாவத்தை** கேட்டு **ரசித்து,** இவர்கள் பாவ மன்னிப்பு கொடுப்பதை **தவறு** என்று கூற எந்த சபை (மார்தோமா. CSI. லூத்தரன்) **பிஷப்மாரும்** முன்வரவில்லை. இத்தனை ஆபாச சம்பவங்கள் நடத்தும் செய்தாள்களில் வந்தும்,டிவியில் காட்டப்பட்டும் CSI மாடரேட்டர் முதல் மற்ற 23 சிஎஸ்ஐ டையோசிஸ்ஸிஜில் உள்ள பிஷப்மாரும் இந்த குறிப்பிட்ட உபதேசம் தவறு என்று சுட்டிக்காட்டவில்லை.

18 ஆயர்கள் ஒரு பெண்ணை பயமுறுத்தி அவளோடு பாலுறவு வைத்த செய்தி இந்திய பெண்கள் பாதுகாப்பு சங்கத்தினர் கடுமையாக எதிர்த்ததோடல்லாமல் இனி குறிப்பிட்ட 3 கிறிஸ்தவ சபைகளிலோ வேறு எந்த சபையிலும் ஆயர்களிடமோ, பிஷப்மார்களிடமோ எந்த பெண்களும் தாங்கள் செய்த இரகசிய பாவங்களைக் குறித்து ஆயரிடம் பாவ அறிக்கை செய்யும் வழகத்தை முற்றுமாய் நிறுத்த கோர்ட் கட்டளையிடவேண்டும். மத்திய அரசு அதற்காக தடை சட்டத்தை பார்லிமென்டில் நிறைவேற்ற வேண்டும் என்று போராட்டம் நடத்தினர். கேரளா பெண்கள் (வனிதா சங்கம்) சங்கத்தினரும் அதை ஆதரித்து போரட்டங்கள் செய்தனர்.

அப்போது தெற்கு கேரள பிஷப் Rt. Rev. தர்மராஜ் ரசலம் அவர்கள் ஆர்த்டாக்ஸ் சபை ரோமன் கத்தோலிக்க சபை ஆகிய சில சபைகளில் ஆயரிடம் பாவ அறிக்கை செய்வது அவர்களுடைய சபையின் பிரதான உபதேசம் ஆகும். அதை தடுக்க யாருக்கும் உரிமை கிடையாது. ஆகவே பாவ அறிக்கை ஆயரிடம் கூறுவது அவர்கள் சபை சடங்கின்படி (ஆஜாரப்படி) சரியானதே. அதை அரசாங்கமோ மற்றும் உள்ள சங்கங்களோ தடுக்ககூடாது என்று கேரளா மனோரமா பத்திரிக்கையில் 31-7-2018 அன்று அறிவித்தார்.


Rt.Rev.A. தர்மராஜ் இரசலம்

எந்த மனிதனிடமும் மற்றொரு மனிதன் தன் பாவத்தை கூறி பாவ மன்னிப்பு பெற முடியாது என்று வேத புத்தகம் தெளிவாக கூறியிருக்கிறது. இயேசு கிறிஸ்துவால் மட்டுமே மனிதனின் பாவத்திற்கு மன்னிப்பை பெற முடியும் என்பதை அறிந்த பிஷப் அவர்கள் இந்த விஷயத்தில் உலக மக்களுக்கு கிறிஸ்தவ உபதேசத்தை தவறாக காண்பித்துவிட்டார்.

CSI மாடரேட்டர் அல்லது மார்தோமா பிஷப்மார் அல்லது மற்ற பிஷப்மார் யாரும் இதைப்பற்றி எந்த விமர்சனமும் செய்யாத சூழ்நிலையில் தெற்கு கேரள பிஷப் அவர்கள் மட்டுமே ஆர்த்டாக்ஸ் சபையின் தவறான (கும்பசரிப்பு) பாவ மன்னிப்பு உபதேசத்துக்கு ஆதரவாக பத்திரிக்கைக்கு பேட்டியளித்தது சரியல்ல என்று ஏராளமான CSI சபை விசுவாசிகள் தங்கள் மனவேதனையை எழுதி ஜாமக்காரனுக்கு அனுப்பியுள்ளார்கள். ஆயர்களும் தங்கள் பங்குக்கு பிஷப் எழுதியது தவறு என்றும் இதைக்குறித்து ஜாமக்காரனில் எழுதவேண்டும் என்றும் எழுதி அறிவித்துள்ளனர். ஆகவே இந்த கட்டுரையை நான் எழுதினேன்.

## புது திருமண தம்பதிகளின் பிழையான பாவ அறிக்கை

**புதிதாக திருமணம் செய்பவர்களில் பலர் மேலே குறிப்பிட்ட சபையின் செயல்களைப்போல் தாங்கள் திருமணத்துக்குமுன் கடந்த காலத்தில் செய்த பாவங்களை திருமணமான முதல் இரவிலேயே ஒருவருக்கொருவர் கூறி பிரச்சனையில் மாட்டிக்கொள்கிறார்கள்.**

ஒரு **புதுமண தம்பதியினர்** திருமணம் முடித்து **முதல் இரவு** சம்பாஷனையில் புது மாப்பிள்ளை தன் மனைவியின் நடத்தையை சோதிக்க தன் புது மணப்பெண்ணிடம் தான் கல்லூரியில் படிக்கும் போது சில பெண்ளை காதலித்தேன், சரீர இச்சையின் தவறையும் நான் செய்தேன் என்று தன்னுடைய **பழைய பாவ செயல்களை** ஒன்றன்பின் ஒன்றாய் கூறிமுடித்து - இப்போது தன் புது மண பெண்ணிடம் கூறிகிறார். நான் **ஒளிவு மறைவு இல்லாமல்** நான் செய்த பாவத்தை பச்சையாக உன்னிடம் கூறிவிட்டேன். இப்போது நீயும் கூறவேண்டும். கடந்த காலத்தில் யாரையாவது நீ **காதலித்ததுண்டா?** அவரோடு சரீர உறவு வைத்துக்கொண்டாயா? இப்படி கேட்க சில வெகுளி பெண்கள் தன் கணவன் மனம்

திறந்து தன்னிடம் மறைக்காமல் **சரீர உறவு வரை** சகல ரகசியத்தையும் கூறியதால் நாமும் ஒன்றும் மறைக்கக்கூடாது என்று கல்லூரி வாழ்க்கையில், தான் குடியிருக்கும் பக்கத்து வீட்டு பையனோடு சில காலம் நெருங்கி பழகியிருக்கிறோம் அவ்வளவுதான் என்றாள். இவன் விடுவதாக இல்லை. ஒருமுறைகூட சரீர உறவு வைத்துக்கொள்ளவில்லையா? நான் மறைக்காமல் எல்லாவற்றையும் கூறினேனே. நீ ஏன் என்னிடம் மறைக்கிறாய் என்று கூற உடனே அவள் தயங்கி தயங்கி ஒரே ஒரு முறை என்று கூறி கண்களை மூடிக்கொண்டாள். இது எவ்வளவு பெரிய விபரீதத்தை உண்டாக்கப்போகிறது என்று அவள் அறியவில்லை. ஒரு ஆண் தான் செய்த பாவங்களை வெளிப்படையாக கூறினால் ஆண்களுக்கு அது பாதிப்பு உண்டாக்காது. ஆனால் ஒரு பெண் சிறு தவறையும் அறிவித்துவிட்டால் அவ்வளவு தான். பெரும் விளைவுகள் உண்டாக்கிவிடும்.

ஒரு வருடம் உருண்டோடியது. தம்பதிகளுக்குள் **சரீர சலிப்பு** உண்டாகி சின்ன சின்ன பிரச்சனைகள் வாய் வார்த்தை சண்டைகள் இவர்களுக்கு உண்டானது. இது எல்லா குடும்பத்திலும் சகஜம்தான். ஆனால் ஒரு நாள் கணவன் கோபத்தின் உச்சக்கட்டம் அடைந்த நிலையில் தன் மனைவியை அழைத்தபோது அவள் பதில் கூறவில்லை. உடனே கணவன் கூறியதென்ன தெரியுமா? ஏன் பதில் கூறவில்லை? உன் **பழைய காதலனை** நினைக்க தொடங்கிவிட்டாயா? என்று கேட்ட உடன் அப்போதுதான் **புயல் உருவானதைபோல்** இவள் அவனை பற்றியும் அவனின் கடந்த கால பாவங்களை பற்றியும்கூற இவர்கள் இருவரும் மாறி மாறி ஒருவரை ஒருவர் வார்த்தையினால் வாக்குவாதம் உண்டாகி **விவாகரத்தில்** முடிந்தது. என்ன பரிதாபம்.

திருமணத்திற்குமுன் திருமணமாகபோகும் தம்பதிகளுக்கு Pre-Marriage Councellingக்கு ஒரு நாள் அல்லது இரண்டு மணிநேரம் இவர்களுக்கு ஆலோசனை வகுப்பு நடத்த சில டையோசிஸ்களால் அழைக்கப்பட்டிருக்கிறேன்.

அப்போது இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை அவர்களுக்கு கூறி எல்லாருடைய வாழ்க்கையிலும் திருமணத்துக்குமுன் கல்லூரி வாழ்க்கையில் - இப்போதெல்லாம் உயர்நிலைப்பள்ளியிலேயே **காதல் விளையாட்டு** பஸ் ஸ்டாண்ட தொடர்பு, வேலை செய்யும் இடங்களில் **பெண் ஊழியர்களோடு** அல்லது உடன்ஊழியர்களான அண்களோடு பழகும்போது இப்படிப்பட்ட **காம சலனம்** உண்டாகாமல் இருக்காது. வாலிப **விடலை பருவத்தில்** இப்படிப்பட்ட பால் உணர்வு சலனங்கள் மனதில் எழாமல் இருக்காது. இப்படிப்பட்ட கால கட்டத்தை கடக்காமல் யாராலும் இருந்திக்க முடியாது. அப்படியிருக்க புது திருமண வாழ்க்கையில் **கடந்த கால** பாவ உணர்வு சம்பவங்களைப்பற்றி கேட்பது, பேசுவது மிகவும் அநாகரிமாகும். கடந்த காலத்தில் நம் வாழ்க்கையில் நடந்தவற்றை பேசவா நாம் திருமணம் செய்திருக்கிறோம்.

**ஆகாத சம்பாஷனைகள்** நல்ல ஒழுகத்தை கெடுக்கும். தேவையற்ற சம்பந்தமில்லாத இப்படிப்பட்ட சம்பாஷனைகளால் பாவம் உண்டாகாமல் போகாது. ஆவிக்குரியவர்கள் ஆவிக்குரியதை மட்டும் சிந்திப்போம். நாம் இணைந்து **ஆவிக்குரிய சந்ததிகளை** கர்த்தருடைய இராஜ்யத்திற்கென்று பெற்று சந்தோஷமாக வாழ்வோம். இருவரும் ஜெபித்து புதுவாழ்க்கையை ஆரம்பிப்போம் என்று கூறி அந்த முதல் இரவில் தேவையற்ற கேள்விகளுக்கு முற்றுப்புள்ளி வையுங்கள் .

குடும்ப வாழ்வில் **ஒளிவு மறைவு அற்றவாழ்கை** என்ற இந்த வார்த்தையை உபயோகித்து **குடும்பம் உடைந்து** போக அஸ்திபாரம் இடாதீர்கள்.

திருமணத்துக்கு முன் **வேறு ஒருவருக்கு மனதை கொடுத்துவிட்டு** புதிய கணவனோடு எப்படி **களங்கமில்லாமல் வாழ்வது.** மனதளவில் **நான் களங்கப்பட்டுவிட்டேனே** என்பது எல்லாம் **சினிமா கதை வசனத்துக்கு** பொருந்தும். இனிமையான ஆவிக்குரிய குடும்ப வாழ்க்கைக்கு இவை பொருந்தாது.

**புது**வாழ்க்கை, **புது** ஜீவியம். கர்த்தருக்கென்று ஆவிக்குரிய குடும்பத்தை கட்டி எழுப்புவது என்ற இலக்கை நோக்கித்தான் நாம் பயனிக்கவேண்டுமே தவிற கடந்த கால நிகழ்ச்சிகளை நினைக்கவும் கூடாது. கடந்த கால தவறான தொடர்பில் ஒருவருக்கொருவர் அடையாள சின்னமாக பெற்ற **பொருளோ. புகைப்படமோ,** பழைய **கடிதங்களோ** மற்ற எதையும் பெட்டியிலோ **மனிபர்சிலோ.** ஹான்பேக்கிலோ வைக்காமல் **கிழித்துப்போடுங்கள்.** பழைய நினைவுகள் வரும் **எந்த இடத்துக்கும் போகாமல்** இருக்க முயலுங்கள். **பழைய தவறான நபர்களை** சந்திக்க நேர்ந்தாலும் பேச, பழக முயலாதீர்கள். **தொலைபேசியில்** அவர்கள் தொடர்பு எண்களை அழித்துவிடுங்கள்.

**குற்ற உணர்வு** பாவ உணர்வு உண்டென்றால் **அதை கர்த்தரிடம் கூறி** பாவ மன்னிப்பை பெற்று புது வாழ்க்கையை தொடருங்கள்.

**தன் பாவத்தை மறைக்கிறவன் (கர்த்தரிடம் மறைக்கிறான்) வாழ்வடைய மாட்டான். அறிக்கை செய்து விட்டுவிடுகிறவன் இரக்கம் பெருவான்.** நீதி 28:13 என்று வேதம் கூறுகிறது. இரக்கம் உள்ள கர்த்தர் **அதை மனமிறங்கி மன்னிப்பார்.** ஆனால் மனிதன் மனதிற்குள்ளேயே வைத்து சந்தேக கண்களோடு பார்ப்பான். இதனால் தம்பதிகள் இருவரும் நிம்மதியாக இருக்க முடியாது.

ஆனால் கர்த்தரோ உன் பாவத்தை என் **முதுக்குபின்னே** எறிந்துவிடுகிறேன் என்கிறார். அதன் அர்த்தம் என்ன? எத்தனை பெரிய பாவம் செய்தாலும் அதை தூக்கி **என் முதுகுக்கு பின்னே எறிந்துவடுகிறேன்** என்றால் என்ன அர்த்தம்? **நானே அதை நினைக்கவில்லை,** பார்க்க விரும்பவில்லை. அப்படியிருக்க **உன் பழைய பாவத்தை** நீயேன் யோசித்து யோசித்து குற்ற உணர்ச்சியுடன் வாழவேண்டும். **மறந்துவிடு** நம் தேவன் எத்தனை நல்லவர். தேவன் நமக்கு அளித்திருப்பது ஒரே ஒரு வாழ்க்கை. அந்த வாழ்க்கையை கர்த்தருக்காக வாழ்ந்து கர்த்தரை திருப்திபடுத்துவோம்.

ஆகவே, உன் பாவத்தைக்குறித்து எந்த **ஆயரிடமோ, பிஷப்பிடமோ, மனைவி அல்லது கணவனிடமோ** கூறக்கூடாது. **கர்த்தரிடம் மட்டும் கூறி** பழையதை மறந்து **புதுவாழ்கை** தொடங்குவீர்களாக. மகிழ்ச்சியோடு வாழ்வீர்கள். ■

## கர்த்தருக்குள் நித்தியடைந்தார்.



திருநெல்வேலி டையோசிஸ் திருமண்டல குருத்துவ செயலரும், பாஸ்ட்ரேட் சேர்மனும், குலவணிகபுரம் கிறிஸ்து ஆலயத்தின் தலைமை ஆயருமான Rt.Rev.ஸ்டீபன் செல்வின்ராஜ் அவர்கள் தன் 57ம் வயதில் திடீரென்று மரித்துப்போனார். திருநெல்வேலி டையோசிஸ் கன்வென்ஷனை 25 வருடங்களுக்கு பிறகு அதே டையோசிஸ் கன்வென்ஷனை மறுபடியும் சிறப்பாக நடத்தி முடித்து காட்டினார் என்றால் மிகையாகாது. ஐயா அவர்கள் விட்டு போயிருக்கும் HM ஆக பணியாற்றும் **திருமதி.கிருபாவதி** அவர்களையும், பிள்ளைகளையும் கர்த்தர்தாமே ஆறுதல்ப்படுத்தி வழிநடத்துவராக. இந்த ஆவிக்குரிய குடும்பத்துக்காக ஜெபிப்போம்.

# கேரள மாநிலத்தில் என்றுமில்லாத வெள்ள பேரழிவு:

## கடவுளின் தேசத்தை கடவுளே கைவிட்டாரா?

இந்திய தேசத்தில் உள்ள **கேரளா மாநிலத்தில்** என்றும் இல்லாத மழை வெள்ள பாதிப்பு இந்தியா அனைத்து மாநில மக்களையும் உலக மக்களையும் கவனிக்கவைத்துள்ளது. **கடவுளில் தேசம்** என்ற ஒரு பெயர் கேரள மாநிலத்துக்கு உண்டு. யார் இந்த பெயரை வைத்ததோ தெரியாது. மலைகள், காடு, மரங்கள், செடிகள் எங்கு திரும்பினாலும் பச்சை பசேல் என்ற செழிப்பு. தென்னை மர தோப்புகள். மாநிலத்தின் ஓரம் முழுவதும் இயற்கையாக அமைந்துவிட்ட கடல்கரையும் இவைகளையெல்லாம் பார்த்து இது அழகான **இறைவனின் சிருஷ்டிப்பு** என்பதை கவனித்த சுற்றுலா வந்தவர்கள் யாரோதான் **கேரளாவை கடவுளின்** தேசம் என்று பெயர் சூட்டினர். ஆனால் நாட்டை ஆள்வதோ கடவுளுக்கு முக்கியத்துவம் கொடுக்காத ஒரு கட்சி. மாறி மாறி மாநிலத்தை ஆட்சி செய்கிறது. அந்த **கடவுளின் தேசம்தான்** கடவுளின் கரத்தில் உள்ள இயற்கை அதிகாரத்தால் பேரழிவை உண்டாகி தேசத்தையே **புரட்டிப்போட்டது.**

கேரளா கலச்சார பிரசித்திப்பெற்ற பண்டிகையான **ஓணம்** பண்டிகையை இம்முறை கொண்டாடப்போவதில்லை என்று **கேரள அரசாங்கம்** அறிவித்தது.

கேராளவில் உள்ள அனைத்து **அணைகளும் நிரம்பியதால்** எல்லா ஷட்டர்களையும் திறந்து **அணை உடையாமல்** காப்பாற்றும் நிலை வந்தது. அதனால் திறந்துவிடப்பட்ட வெள்ளம் பெருக்கெடுத்து ஓடி வெள்ளமானது கேரளத்தின் ஜீவ நதிகளான **பம்பை, பெரியாறு** இந்த இரண்டு நதிகளில் கலந்து பெருக்கெடுத்து ஓடி தேசமெங்கும் குறுக்கே ஓடும் ஒரு **புழைகளில்** கலந்து **புழைகளின் கரைகளையும்** கடந்து ஊருக்குள் வெள்ளம் புகுந்து நாட்டையே மூழ்கடித்து பெருங்குடிமக்களையும், ஏழை மக்களையும் **வீடு இல்லாதவர்களாக்கி** எல்லாரையும் **இலங்கை அகதிகள்போல்** ஆகாரத்துக்கும் குடிதண்ணீருக்கும் ஏங்கவைத்தது. கழிப்பிடம் இல்லாத நிலை **மாற்று உடை இல்லாத நிலை.** இதை வாசிப்பவர் சற்றே கற்பனை செய்து பாருங்கள். இந்த வெள்ளம் சும்மாவா விட்டது. பணக்காரர்களை **ஏழைகளாக்கியது.** ஏழைகள் **மிகவும் ஏழ்மைக்கு** தள்ளப்ட்டனர். கேரளாவில் உள்ள காசர்கோடு மாவட்டத்தை தவிர எல்லா மாவட்டங்களும் நீரில் மூழ்கின. அரேபியா போன்ற கல்ப் ராஜ்யங்களில் மற்றும் வெளி நாட்டில் வாழும் மலையாளிகள் , தமிழர்கள் ஏராளமாக பண உதவிகள் அரசாங்கத்தின் மூலமாகவும். நண்பர்கள், உறவினர்களள் மூலமாகவும் உதவிகளை அள்ளி கொடுத்துள்ளனர். ஊருக்குள் புகுந்து கேரள மக்கள் முதல் முறை அகதிகள்போல் தற்காலிக கூடராங்களிலும், பள்ளிக்கூடங்களிலும்,தேவாலயங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள்.

கேரளா மாநிலத்தில் வெள்ளத்தால் ஏற்பட்ட இத்தனை பெரிய அழிவை இதுவரை நான் கேள்விப்பட்டதில்லை. வீடு இழந்தவர்கள், மட்டுமல்ல, பாஸ்போர்ட்,பிள்ளைகளின் டிகிரி சான்றிதழ்கள்,வங்கி கணக்கு விவரம், சொத்து பத்திரங்கள் என்று மிக முக்கியமான ஆவணங்கள் முழுவதுமாக அழிக்கப்பட்டு பெரும் இழப்பு, நஷ்டம் ஏராளம். ஏராளம்.

**கேரள** மக்களுக்கு **ஜாமக்காரன்** வாசகர்கள் சார்பிலும், **என் சார்பிலும்** ஆழ்ந்த அனுதாபங்களை அறிவிக்கிறேன். அவர்களுக்காக ஜெபிக்கிறேன்.எல்லா மாநிலங்களிலிருந்தும்

எல்லாவித ஸ்தாபனங்கள், பத்திரிக்கைகள், நடிகர்கள் சங்கம், கிறிஸ்தவ சபைகள்,பள்ளிக்கூட சிறுவர்கள் முதல் கல்லூரி மாணவர்கள்வரை நன்கொடை வசூலித்து கேரள முதல்அமைச்சர் நிதிக்கும், கேரளா அரசாங்கத்தின் வழியாக பணம், உடைகள், மருந்துகள் மற்றும் உதவி பொருள்கள் மனிதநேயத்தோடு அனுப்ப தொடங்கிவிட்டனர். (இலங்கைத்தவிர) வெளிநாட்டில் வசிக்கும் தமிழ்-மலையாள ஜாமக்காரன் வாசகர்கள் தங்களால் எந்தவிதமான உதவிகள் பாதிக்கப்பட்ட கேரள மக்களுக்கு செய்ய இயலுமோ அதை அவரவர் **சபை மூலமாகவோ, ஸ்தாபனம் மூலமாகவோ, தனிப்பட்ட முறையிலோ** உதவிகளை அனுப்பி பாஷை-மாநிலம்-கட்சி-மதம் வித்தியாசம்பாராமல் **மனிதநேயத்தோடு** கேரளா மாநில மக்களுக்கு உதவி கரம் நீட்டி ஆறுதல் கூறுவோம். கடந்த 100 வருடங்களுக்குமுன் இதே போன்ற மழை வெள்ள பேரழிவு உண்டானது. அப்போது மகாத்மா காந்தி அவர்கள் 7000/- ரூபாய்களை (இன்று 7 கோடிக்கு சமம்) சேகரித்து கேரளத்துக்கு உதவியதாக சரித்திரம் கூறுகிறது. அதன்பின் மழைவெள்ள பேரழிவு இப்போதுதான் ஏற்பட்டுள்ளது. மிகப்பெரும் பாதிப்பும், பேரழிவையும் நானே நேரில் கேரளா சென்றபோது கண்டதால் இதை அறிவிக்கிறேன். நாம் யாவரும் கேரளா மாநிலத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

**எச்சரிக்கை :** கேரளத்தில் இத்தனைபெரிய பேரழிவு ஏற்பட்ட காரணம் என்ன? மிக அதிக எண்ணிக்கை கிறிஸ்தவர்கள் உள்ள கேரளமக்கள் உண்மை கிறிஸ்தவர்களாக மாற வேண்டும். இயேசு கிறிஸ்துவின் சீஷன் தோமா முதல் சுவிசேஷம் கேரளத்தில்தான் அறிவித்தார். இந்திய மக்கள் இயேசுவை அறியவேண்டுமானால் உயிர்மீட்சி கேரளத்திலிருந்துதான் தொடங்க வேண்டும். கேரளம் பழைய நிலைக்கு வர பல மாதங்கள் ஆகும். அதற்குமுன் சபைகளில் உபவாச கூட்டங்கள் கூட்டி ஜெபம் தொடங்கட்டும். இந்தியாவிலேயே மிக நல்லமுறையில் செல்வாக்கோடு வாழ்பவர்கள் கேரள மக்கள். இந்தியாவிலேயே மிக அதிகமாக வெளிநாட்டு பணம் பெருவதும் கேரள மக்களாகும். இந்த பெருமைகள் எல்லாம் ஆகஸ்ட் 2018ம் தேதி தலைகீழாக மாறிப்போனது. ஜனங்கள் தங்கள் பெருமையைவிட்டு தாழ்த்தி உபவாசம் செய்து என்னை நேராக வேண்டினால் அவர்களுக்கு அவர் தேசத்துக்கு சுபிட்சம் உண்டாக்குவேன் என்று கர்த்தர் கூறுகிறதாக வேதம் கூறுகிறது.

**நான் தேசத்தை அழிக்காதபடி இருக்க திறப்பின் வாசலில் நிற்க ஒருவன் தேவை என்று ஜெபிக்க தேவன் அழைக்கிறார்.** எசே. 22:30

## கேரளா தேசத்துக்கு ஷேமம் எப்போது வரும்?

**என் நாம் தரிக்கப்பட்ட(கிறிஸ்தவர்கள்) என் ஜனங்கள் தங்களை தாழ்த்தி ஜெபம் பண்ணி, என் முகத்தை தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டு திரும்பினால் அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் (அவர்கள் ஜெபத்தை) கேட்டு அவர்கள் பாவத்தை மன்னித்து அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக் கொடுப்பேன்.** 2 நாளா 7:14.

இரட்சிக்கப்பட்ட அனைத்து கிறிஸ்தவர்களும் கேரளத்தில் ஒன்றுகூடி ஜெபிக்க தீர்மானியுங்கள். இழந்ததையெல்லாம் திரும்ப கொடுக்கும் தெய்வத்தின் இரக்கமுள்ள கால்களை நாம் பிடிப்போம். தேவனை அறியாத ஜப்பான் உயிர்பெற்று திரும்ப எழுந்ததைபோல கேரளமும் எழும் சந்தேகமில்லை. ஜெபிப்போம். **--- ஜாமக்காரன்.**

# திருமண ஜெபம்

அன்பின் தேவனே மனித இனம் நலத்துடனும் மகிழ்ச்சியுடனும் இருக்கவே நீர் திருமணத்தை உண்டாக்கினீர் . இந்த திட்டம் உம்முடையது. உம்மோடு உமக்குள் வாழ்ந்ததால் மாத்திரமே நாங்கள் இதை சந்தோஷமாக அனுபவிக்க முடியும். நீரே மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல. ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றீர். அதிலிருந்து மகிழ்ச்சி இரட்டிப்பானது. ஏனெனில் ஒருவரின் சந்தோஷமே மற்றொருவரின் சந்தோஷம். மணமக்களின் சுமைகள் இப்பொழுது பாதியாக இருக்கிறது அவற்றைப் பகிர்ந்துகொள்ளும்போது பளு குறைகிறது.

இந்தக் கணவனை ஆசீர்வதியும். இவர்களின் தேவைகளை சந்தியும், கையின் பிரயாசத்தை நிலைத்திருக்க உதவும். அவனுடைய **பெலனே** அவளின் **பாதுகாப்பாகவும்** அவனது **சுபாவமே** அவளது **பெருமையாகவும்** இருப்பதாக அன்புக்காக ஏங்கும் பெண்ணின் இருதயத்திற்கு அவன் ஓர் புகலிடமாய் வாழ்ந்து சுகித்திருப்பானாக.

இந்த அன்பான மனைவியை ஆசீர்வதியும்,அவளுக்கு மென்மையும்,ஆழமான **புரிந்து கொள்ளுதலையும்** மிகப்பெரிய விசுவாசத்தையும் தாரும். ஒருவருக்காக ஒருவர் வாழும் வாழ்க்கை மட்டுமே திருமணம் என்பதல்ல என போதியும். இருவரும் சேர்ந்து **உம்மை சேவிப்பதே** வாழ்க்கையின் ஆவிக்குரிய நோக்கம் எனக் காண்பியும். அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடட்டும். மற்ற காரியங்கள் எல்லாம் அவர்களுக்குக் கொடுக்கப்படும். உமக்கு மட்டுமே உரித்தான **பூரணத்தை** அவர்கள் ஒருவரிடத்திலிருந்து ஒருவர் எதிர்பாக்காமல் இருக்கட்டும். ஒருவருக்கொருவர் **பெலவீனங்களை** குறைத்துக்கொள்ளட்டும். ஒருவரிடத்திலுள்ள பெலன்களை பெரிதுபடுத்தி உடனே துரிதமாக தேவனை துதிக்கட்டும். ஒருவரையொருவர் அன்பானவரின் **கருணையுள்ள** மற்றும் பொறுமையுள்ள கண்களினால் காணட்டும்.

அவர்கள் இணைந்து நடக்கும்போது அவர்கள் சுபாவங்கள் மெருகேற்றத்தக்கதாக உமது சித்தப்படி அவர்களுக்குப் பொறுப்புகளைத் தந்தருளும். அவர்களை மென்மையாக வைக்கத்தக்க தேவையான ஞானத்தையும் **மனிதாபிமானத்தோடு** நடந்துகொள்ளத் வேண்டிய விருப்பத்தையும் தாரும். உம்மோடு தங்கள் கரங்களை இறுக்கமாக பற்றிக்கொள்ளத் தேவையான தோல்விகளையும் அவைகளை தாங்கி சகித்து உம்மோடு நடக்கும் நடையில் அவர்கள் உற்சாகப்படதக்கதாக அவரோடுகூட தேவையான வெற்றிகளையும் தாரும். ஒருவர் பலவீனத்தை வித்தியாசமான சுபாவத்தை குறை கூறாமல் அதை அப்படியே ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தை இருவருக்கும் தாரும். நீர் பிரிக்கும் தேவனல்ல, சேர்க்கும் தேவன் என்பதை இருவரும் புரிந்துகொள்வார்களாக.

அவர்கள் ஒருவர் மற்றொருவர் மேல் வைத்துள்ள அன்பை சாதாரண கடமையாக கருதாமல் இந்த முழு உலகத்திலேயும் நீ என்னை மட்டும் தெரிந்துகொண்டாய் என்ற பெரிய அதிசயத்தை தொடர்ந்து அனுபவிக்கட்டும். அவர்களுடைய வாழ்கை முடியும்போதும் இப்பொழுது இருப்பதைபோலவே கையோடு கைகோர்த்து ஒருவருக்காக ஒருவர் உமக்கு நன்றி செலுத்தட்டும். அவர்கள் மகிழ்ச்சியோடும் உண்மையோடும் இணைந்தும் ஒருவர் மற்றவரைப்பற்றிக்கொண்டு உம்முடைய நித்திய கரத்தில் இளைப்பாறுதலுக்கு வரும் வரை. உமக்கு ஊழியம் செய்யட்டும்.

பிதவே எங்களுடைய ஆத்தும நேசராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே இதைக் கேட்கிறோம். ஆமென்.

# மொழி பெயர்ப்புக்கு மொழி பெயர்ப்பு : (நன்றி: நற்போதகம்)

| | | | |
|---|---|---|---|
| கோராவாரி | - | சூறாவளி | (எரே 320:23) |
| கெவினி | - | மதில்சுவர் | ( 2 சாமு 18:24) |
| சதி சற்பனை | - | கைவினைச் செயல் | (ஏசாயா 25:11) |
| சக்கந்தம் | - | ஏளனம் (நெகே/ 4:1) | |
| சக்கராகரம் | - | வளைவாள விழிம்பு, வட்ட வடிவம் (நாளா 4:2) | |
| சப்பரம் | - | தேர். பல்லக்கு | (ஆமோஸ் 5:26) |
| சம்பிரதி | - | நகர ஆணையர். செயலர். எழுத்தர் (அப் 19:36) | |
| சம்பாஷணை | - | உரையாடல் | (லூக்கா 9:30) |
| சம்பாரம் | - | நறுமணப்பொருள் | (எசேக்கியேல் 24:30) |
| சர்ப்பனை | - | சதி சூழ்ச்சி | (அப். 23:30) |
| சல்லடங்கள் | - | கால் சட்டைகள் | (யாத். 39:28) |
| சன்னது | - | ஆவணம் | (எஸ்றா 8:36) |
| சன்னத்க்காரன் | - | சூன்யம் செய்பவர் | (உபா 18:11) |
| சன்னத்தர் | - | போர்வீரன் | (யோபு 15:24) |
| சன்னது | - | ஆவணமடல் | (எஸ்றா 8:36) |
| சன்னதம் | - | திருவுளம் | (2 ராஜா 16:15) |
| சருவம் | - | அண்டா | (1 சாமு 2:14) |
| சர்ப்பணி | - | தங்க சங்கிலி | (நியா 8:26) |
| சவக்கரணை | - | அரசியல் குற்ற மன்னிப்பு | (எஸ்தர் 2:16) |
| சாக்குருவி | - | ஆந்தை | (ஏசாயா 34:14) |
| சாமாசி | - | மத்தியஸ்தன் | (யோபு 33:23) |
| சாலகம் | - | கால்வாய, வாய்கால் | (2 ராஜா 20:30) |
| சாவுதானம் | - | கவனம் | (2 நாளா 3:38) |
| சாங்கோபாகம் | - | பாதுகாப்பு. நலம் | (யோபு 12:6) |
| சாந்துக்காறை | - | இளம்பிறை அணிகலன் | (நியா 8:21) |
| சொமக்கட்டண்டை | - | காவல்மேடு | (2 நாளா 20:24) |
| சித்திக்காது | - | வெற்றியடையாது | (2 நாளா 3:12) |
| சிரபூஷணம் | - | தலை அணிகலன்கள் | (ஏசாயா 3:20) |
| சீதளம் | - | குளிர் | (அதி 8:22) |
| சுட்டிகள் | - | நெற்றி அணிகலன்கள் | (ஏசாயா 3:18) |
| சுமுத்திரையான | - | சரியான அளவுள்ள | (லேவி 19:36) |
| சூநீரம் சூதகம் | - | மாதவிலக்க | (லேவி 21:10, 18,19) |
| சுயாதீனம் | - | தன்னுரிமை | (1 கொரி 10:29) |
| சோர்வைகாரர் | - | படைத்தலைவர் | (2 ராஜா 10:25) |
| சேஷ்ட புத்திரபாகம் | - | தலைமகன் உரிமை | (ஆதி 25:32) |
| சோர மார்க்கமாய் | - | கள்ளமனமான | (லேவி17:7) |
| சிரங்கை | - | கைபஜடி அளவு | (எசேக் 13:19) |
| சிரிஷம் | - | மார்கழி விண்மீன் | (யோபு 38:31) |
| ஜல்லடம் | - | சல்லடை | (ஆமோர் 9:9) |
| ஜலப்பிரளயம் | - | வெள்ளப்பெருக்கு | (ஆதி 10:32) |
| ஜாதிலிங்கவர்ணம் | - | செவ்வண்ணம் | (எரேமியா 22:13) |
| ஜாதி | - | இனம் | (ஆதி 1:11) |
| ஜீவித்துபோய் | - | உயிர்நீத்து | (ஆதி 49:33) |
| ஸ்திதி | - | அந்தஸ்து | (எஸ்தர் 2:18) |
| தகசுதோல் | - | வெள்ளாட்டுதோல் | (யாத் 38:8) |
| தத்தமாக | - | பரிசாக | (எண் .18:6) |
| தஸ்திர அறை | - | பத்திர அறை | (எஸ்றா 6:1) |
| தர்ப்பணம் | - | கண்ணாடி | (யாத் 38:8) |
| துரிஞ்சில் | - | வெளவால் | (ஏசாயா 2:21) |
| துர்ச்சனப்பிரவாகம் | - | அழிவின் சூழல்கள் | (2 சாமு 22:5) |
| துரிசாய் | - | விரைவாக | (எஸ்றா 5:6) |
| துருத்தி | - | தோல்பை | (ஆதி 21:14) |
| துரைத்தனம் | - | அதிகாரம். அதிக்கம் | (ஆதி 37:8) |
| துன்னாள் | - | துன்பப்பட்டவன் | (யோபு 30:25) |
| துண்டரிக்காரன் | - | கொடூரக்காரன் | (தானி 11:14) |
| துபாசி | - | மொழி பெயர்ப்பாளர் | (ஆதி 42:23) |
| தூபஸ்தம்பம் | - | புகைத்தூன் | (உன் 3:6) |
| தூலம் | - | இருப்புக்கோல் | (ஏசாயா 28:27) |
| தொழுங்கு | - | குலை | (உன் 7:7) |
| தொந்தம் | - | நெருங்கிய உள்ளன்பு | (நீதி 18:24) |
| தெற்றுகள் | - | பாசறை | (ஏசா 29:3) |
| நமூடு | - | நாரை சிட்டுக்குருவி | (2 ராஜா 13:20) |
| சொமக்கட்டண்டை | - | காவல்மேடு | (2 நாளா 20:24) |
| தத்தமாக | - | பரிசாக | (எண் 18:6) |
| தவணம் | - | தாகம் | (2 சாமு 17:29) |
| தண்டுகள் | - | படைபிரிவுகள் கொள்ளைகூட்டம் | |
| தளவரிசை | - | நடைமேடை | (எசேக் 42:3) |
| துரோகிருதன் | - | தீச்செயல் புரிபவன் | (சாமு 25:3) |

## FMPBக்கு புதிய தலைவர் தெரிந்தெடுக்கப்பட்டார்



Bro.REGINOLD

FMPS நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு என்ற மிஷனரி ஸ்தாபனத்துக்கு தலைவராக சகோ. **ரெஜினால்ட்** அவர்களும், உபதலைவராக சகோ.**ஜேம்ஸ் தர்மபாலன்** அவர்களும், பொருளாலர்.சகோ.மணிசாமுவேல் அவர்களும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

புதிய தலைவர்களை ஜாமக்காரன் வாசகர்கள் சார்பிலும், என் சார்பிலும் வாழ்த்துகிறேன். தலைவர்களுக்காக நாம் தொடர்ந்து ஜெபிப்போம்.

**ஜாமக்காரனின்ன ஆலோசனை : FMPB** ஆசியாவிலேயே மிகப் பெரிய மிஷனரி ஸ்தாபனமாகும். சுமார் 7000 மிஷனரிகள். இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் உள்ள ஆதிவாசிகள் நிறைந்த பணிதளங்களில் ஊழியம் செய்கிறார்கள். அனைத்து பணிதளங்களுக்கு சென்று பார்வையிடுவது, மிஷனரிகளின் தேவைகள், பணிதள பிரச்சனைகள் இப்படி ஏராளமான ஊழிய பளுக்களை ஒரு பொதுசெயலர் மூலமாக மட்டும் செயல்படுத்துவது என்பது மிக கடினமானதாகும். ஆகவே குறைந்தது இரண்டு உதவி செயலர்கள் நிர்வாகத்திற்கும், இந்தியாவின் அனைத்து பணிதள சந்திப்புக்கும் பிரச்சனை உள்ள இடங்களில் தீவிரமாக சென்று சந்திக்க, உதவி செயலர்கள் மிக அவசியம். இவ்விஷயத்துக்காக ஜெபிக்க தொடங்கிவிட்டோம். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.

**SEPTEMBER 2018**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.